Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI ஜூலை 23. 1944 4 அணா



இதை அளிப்பதிலேயே ஒரு அலாதி அந்தஸ்து

டிலக்ஸ் டெனர் சிகரெட்டை உங்கள் சிநேகிதர்கள் ரஸிப்பார்கள். 100% உத்தர வாதமுள்ள தூய வர்ஜீனியா புகையிலையி லிருந்துதான் டெனர்ஸ் தயாரானவை. டெனர் சிகரெட்டுகள் உங்களது ரஸிகத் தன்மைக்கு ஒரு அத்தாட்சி ஆகும். இவை களின் தனி மணம் இவைகளுக்கே உரித் தானது. மெல்லிய தொண்டை உடைய வர்கள் அனுபவிக்கக் கூடியது டெனர்தான்.

tenor

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு

ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD. LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA


சுயமாக வெளுக்கும் நுரையைப்பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?


SUNLIGHT

படித்துப் பார்!

கவிஞன் குரல்

[ஆசிரியர்: நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை; பிரசுரம்: தமிழ்ப்பண்ணை, சென்னை; விலை ரூ. 3.]

பூரண சந்திரன் பின்னணியில் பிரகாசிக்க, ஒரு கிளையில் இரு குயில்கள் அமர்ந்திருக்கும் கண்ணுக்கினிய காட்சி இந்தக் "கவிஞன் குரல்" என்னும் புத்தகத்தின் மேலட்டையை அலங்கரிக்கிறது.

குயில்கள் சும்மா இருக்கவில்லை; செவிக்கினிய கீதம் எதையோ பாடத்தான் செய்கின்றன.

அந்த கீதம் என்னவாயிருக்கும்?

"படையாமல் உண்ணாத
தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத
தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள்
அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத
தமிழ்நாடு வாழ்க!"

என்னும் அருமையான நாமக்கல் கவிஞரின் கீதத்தைத்தான் அவை பாடுவதாகத் தோன்றுகிறது. இல்லாவிடில், அக் குயில்களின் தோற்றத்தில் அவ்வளவு குதூகலம் காணப்படுமா?

இந்தக் 'கல்கி' இதழின் அட்டையில் தோற்றமளிக்கும் தேச பக்தக் கவிஞரான நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவ்வப்போது நிகழ்த்திய சொற்பொழிவுகளைத் தொகுத்து இந்த அழகிய தோற்றம் கொண்ட நூலைத் "தமிழ்ப்பண்ணை"க்காரர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளையின் பிரசங்கம் ஒவ்வொன்றிலும் தேச விடுதலை ஆர்வமும் சமூக முன்னேற்ற நாட்டமும் ஊடுருவி நிற்கும். தேசத்துக்கோ சமூகத்துக்கோ பயன்படாத சாரமற்ற விஷயங்களைப் பற்றி அவர் பேசுவதே கிடையாது.

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் விசால மனப்பான்மைக்கும், உணர்ச்சி ததும்பும் நடைக்கும் ஓர் உதாரணம்:—

"பிராமணர்கள் எல்லாரும் சூழ்ச்சிக்காரர்களென்றும், பிற ஜாதியாரைக் கெடுத்தே ஜீவனம் செய்யும் பித்தலாட்டக்காரர்கள் என்றும் சொல்லப்படும் ஒரு பிரசாரத்தை என்னவென்று சொல்வது! இந்தப் பிரசாரத்துக்கென்று நடத்தப்பட்டு வரும் தமிழ்ப் பத்திரிகைகளும், அவற்றை ஆதரிக்கும் தலைவர்களும் பிரயோகப்படுத்துகின்ற மிகக் கொச்சையான வார்த்தைகளை நினைக்கவும் கூட மனம் கூசுகின்றது. அப்படி ஒரு சமூகத்தை ஏகோபித்து அவமதிப்பது அன்பல்ல; அழகல்ல; ஆண்மையும் ஆகாது. பிராமணரல்லாத தமிழர்களின் பேரால் இப்படி ஒரு சமூகத்தை இழிவுபடுத்திப் பேசுவதைக் கேட்கும்போதெல்லாம் பிராமணரல்லாத என் மனம் நாணுகின்றது; தலைகுனிகின்றது; பகுத்தறிவு பதைக்கின்றது; சுயமரியாதை சுருங்குகின்றது; நீதி நிந்திக்கின்றது; நேர்மை சிந்திக்கின்றது. தமிழ் எழுத்துக்களில் அந்தக் கொச்சைப் பதங்களும் எண்ணங்களும் அச்சிட்டிருப்பதைப் பார்க்கும்போதெல்லாம் என்னுடைய தாய் மொழி இவ்வளவு அசுத்தப்பட்டு வருகின்றதே என்று என் மனம் தவிக்கின்றது."

ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை "பிராமணர் பிராமணரல்லாதார்" பிரச்னையைப் பற்றிச் சாங்கோபாங்கமாகவும், ஐயத்திற்கு இடமின்றியும் தெளிவான நடையில் நிகழ்த்தியுள்ள 18 பக்கப் பிரசங்கத்திலிருந்து மேற்படி பகுதி எடுக்கப்பட்டது.

இந்தப் புத்தகத்தின் அமைப்பும், அச்சும் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளையினுடைய கவி பெருமைக்குத் தகுதியானவை.

நாமக்கல் கவிஞரின் நூல்களை வெளியிடுவதின் மூலம் "தமிழ்ப் பண்ணை"க்காரர்கள் தமிழ் நாட்டுக்கே அரும் பெரும் தொண்டு செய்து வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

விருத்தகிரி வெண்பா

[இயற்றியவர்: டி. எஸ். கல்யாணராமன்; கிடைக்குமிடம்: கமலா பிஸ்கட் ஷாப், விருத்தாசலம்; விலை: அணா 4.]

"முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன்" என்றபடி தமிழில் வைதவர்க்கே வாழ்வு தரும் பெருமான் என்றால், வாழ்த்தினவரைச் சும்மாவிடுவாரா? அருள் செய்தே தீருவார். நூறு பாடல்களுக்கு மேல் தீந்தமிழில் பாடி இறைவனையும் இறைவியையும் துதித்திருக்கும் இந்த பக்தரின் தொண்டை இறைவன் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டிருப்பான் என்பதில் ஐயமில்லை.



"கொஞ்ச நாள் குடும்பச் சண்டைச் சச்சரவு இல்லாமல் நிம்மதியா இருக்கலாம்னுதான் இந்தச் சண்டையிலே சேர்ந்திருக்கேன்."

அனுமந்தராவ் இவான் பகதூரின் பதிலைக் கேட்டுக் கொஞ்சமும் சளைக்காமல், "இன்னொரு விஷயம். அமெரிக்கன் 'பவர்லெட்' மாடல் மோட்டார்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். சென்னை நகரத்துக்கு நான்தான் ஸோல்



ஏஜெண்டு. வேறு எந்த இடத்திலும் அந்த மாடல் கிடையாது. யுத்த நிலைமை காரணமாக......" என்று ஆரம்பித்தார். இவான்பகதூர் அவரை இடைமறித்து, "என்னிடம் ஏற்கெனவே ஒரு கார் இருக்கிறது. வேறு கார் வாங்கும் உத்தேசம் இல்லை. தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். உம்மை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

அனுமந்தராவா விடுகிறவர்?

"போகட்டும். இன்னும் ஒன்று. பிரசித்திபெற்ற மாருதி கடியாரக் கம்பெனியார் என்னைப் பிரதிநிதியாக இங்கே நியமித்திருக்கிறார்கள். சகல விதமான கடியாரங்களும் சொற்ப விலையில்......"

அதற்கு மேல் இவான்பகதூரால் பொறுக்க முடியவில்லை. உதடுகளுடன் மீசையும் சேர்ந்து துடித்தது. "ஆமாம்; இன்னும் நீர் என்னென்ன கம்பெனிகளுக் கெல்லாம் ஏஜண்டு?..." என்றார் அவர் எரிச்சலுடன்.

"இன்னுமா? ஷைபர் மார்க் சிமிண்டு, யானை மார்க் கொசுக்கடி மருந்து, முதலிய எவ்வளவோ சாமான்களுக்கு அடியேன்தான் ஏஜண்டு..."

"உலகத்தி விருப்பவை யெல்லாம் உம்முடைய கம்பெனிகள்! எல்லாவற்றிற்கும் நீரே ஏஜெண்டு! எந்த



இழவையாவது உம்மிடம் வாங்கித் தொலைக்க வேண்டும். இல்லா விட்டால் போகமாட்டீர். இல்லையா?...... ஐயா! உம்மை உள்ளே விட்டது தப்பு! சுத்தத் தப்பு! இந்த மாதிரிப் பிராணனை வாங்கும் ஏஜெண்டுகளைப் போன்ற உபத்திரவம் பிடித்த மனிதர்கள் உள்ளே வராமல் இருப்பதற்காக வாசலில் ஒரு போர்டு போட்டுவிட வேண்டியதுதான்!"

இதைக் கேட்டதும் அநுமந்தராவ் முகமலர்ச்சியோடு, "அப்படிச் சொல்லுங்கள். அதாவது கேட்டீர்களே! பட்டண வாசத்தில் இந்த மாதிரி ஏஜெண்டுகளின் தொந்தரவு அதிகம் தான். அதற்கு நீங்கள் சொன்ன மாதிரி அவசியம் ஒரு போர்டு போட்டுவிட வேண்டியதுதான்!" என்று சொல்லிக் கொண்டே பெட்டியைத் திறந்து ஒன்றரை அடி நீளத்தில் ஒரு பித்தளைத் தகட்டை எடுத்து இவான் பகதூர் இல்லைநாயகம் பிள்ளையவர்களிடம் கொடுத்தார். அந்த போர்டில்,

"கம்பெனி ஏஜெண்டுகள், பிரதிநிதிகள் உள்ளே நுழையக்கூடாது!"

என்று கொட்டை யெழுத்தில் செதுக்கப்பட்டிருந்தது. அந்தப் போர்டைப் பார்த்ததும் இவான்பகதூரின் கோபம் சற்றுத் தணிந்தது.



அனுமந்தராவ் கொஞ்சமும் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், "ஸார்! இதோ பாருங்கள்! இது அசல் பித்தளையில் செய்தது! இதில் ஒன்றை வாங்கி மாட்டி விடுங்கள்" என்று யோசனை கூறினார்.

"உங்களைப் போன்றவர்களின் கொட்டத்தை அடக்க இதுதான் வழி!" என்று இவான்பகதூர் மிடுக்காகப் பேசினார்.

"போர்டின் விலை ஐந்து ரூபாய். நாளை உங்கள் வீட்டு வாசற்படியில் போய் மாட்டி விடுகிறேன்" என்று சொல்லி அநுமந்தராவ் அந்த போர்டை வாசலில் மாட்டிவிட்டு ஐந்து ரூபாயை வாங்கிக் கொண்டு வெளியேறிவிட்டார்.

அவர் வெளியே போனதும், "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டார் இவான் பகதூர் இல்லை நாயகம் பிள்ளை.

அதே சமயத்தில் வாசற்படியில் இறங்கிக் கொண்டிருந்த ஏஜெண்டு அநுமந்தராவ், "அப்பா! ஒரு போர்டு விற்பதற்கு எத்தனை பேச்சுப் பேச வேண்டியிருந்தது? எத்தனை வேஷம் போட வேண்டியிருந்தது?" என்று அலுப்புடன் கூறியது இவான்பகதூர் இல்லைநாயகம் பிள்ளையவர்களின் காதில் நன்றாக விழுந்தது.

விடாக்கண்டர்

ஸோமாஸ்

திவான்பகதூர் இல்லைநாயகம் பிள்ளை பகல் மூன்று மணிக்குக் காப்பி சாப்பிட்டு விட்டு ஈஸி சேரில் சாய்ந்து கொண்டிருந்தார். 'ஜிலுஜிலு' என்று காற்று வீசியது. இலேசான தூக்கம் அவர் கண்ணை எங்கேயோ செருகியது. இந்தச் சமயத்தில் 'டக் டக்' என்ற பூட்ஸ் சத்தம் அவரது தூக்கத்தைக் கலைத்தது.

அழகாக உடையணிந்து கொண்டிருந்த ஒருவர் தோல் பையும் கையுமாக அவருக்கு எதிரில் காட்சியளித்தார்.

"நமஸ்காரம்!" என்றார் வந்தவர்.

"நமஸ்காரம். என்ன விசேஷம்?"

"தாங்கள்தானே திவான் பகதூர் இல்லைநாயகம் பிள்ளை?"

"ஆமாம். தாங்கள் யார்?"

"என் பெயர் அநுமந்தராவ். ஏஜெண்டு அநுமந்தராவ் என்றால் இந்தப் பக்கங்களில் தெரியாதவர்கள் கிடையாது. நீங்கள் இவ்வூருக்குப் புதிதாக வந்திருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். பார்த்துப் பரிச்சயம் செய்து கொள்ளலாம் என்று வந்தேன்."

இதைக் கேட்ட திவான்பகதூரின் மனம் திக் என்றது. பேயடித்ததுபோல் அவர் முகம் விகாரமாக மாறிவிட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு அநுமந்தராவை நாற்காலியில் உட்காரச் சொன்னார். அவரும் உட்கார்ந்தார்.

"என்னிடம் தாங்கள் வந்த காரியம் என்னவோ?" என்று கேட்டார் திவான்பகதூர்.

"ஒன்றும் பெரிய காரியமில்லை. தங்களைப் போன்ற பெரிய மனிதர்களுடைய சகவாசம் கிடைப்பதே பெரிய பாக்கியமல்லவா? காலம் தலைகீழாக மாறி விட்டது. சாதாரண நாட்களிலேயே மானிட வாழ்க்கையில் எவ்வளவோ விபத்துக்கள் நேரும். இப்போது யுத்தம் ஆரம்பித்தாலும் ஆரம்பித்தது, மானிட வாழ்க்கை ரொம்பமோசமாகிவிட்டது."

"ஆமாம், வாஸ்தவந்தான். அதற்காக என்னை என்ன செய்யச் சொல்கிறீர்?"

"கொஞ்சம் பொறுங்கள்! பஞ்சத்தினாலும் நோயினாலும் மக்கள் மடிவது போதாதென்று ராணுவ லாரிகள் வேறு தோன்றியிருக்கின்றன. சென்னையில் இப்பொழுது ஏற்படும் மரணங்களெல்லாம் பெரும்பாலும் ராணுவ லாரிகளினால்தான்!"


"ரொம்ப சரி! இப்பொழுது அதற்கென்ன?"

"நான் சொல்வது என்னவென்றால், இந்த அநித்திய வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களைக் கொஞ்சங்கூட யோசியாமல் நாம் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறோமே! நம்மை அண்டியிருப்பவர்களைக் காப்பாற்ற முன்கூட்டியே யோசித்துக் காரியம் செய்ய வேண்டாமா? பாலிஸிதாரர்களின் நன்மையிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிற கம்பெனி ஒன்று உண்டு என்றால், அது எங்கள் சித்திரகுப்தா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிதான்!"

"நீர் இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டா? உங்கள் பையைப் பார்த்ததுமே நான் நினைத்தேன். நீங்கள் வீணாகச் சிரமப்பட வேண்டாம். எனக்கு இன்ஷ்யூரன்ஸில் நம்பிக்கையே கிடையாது. போய் வாரும்!" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டே சொன்னார் இல்லைநாயகம் பிள்ளை.

அநுமந்த ராவ், "தாங்கள் மற்ற கம்பெனிகளைப் போலவே சித்திர குப்தா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியையும் எண்ணி விடக்கூடாது" என்றார்.

"போதும், போதும்! சித்திர குப்தனுமாச்சு, எமதர்மனுமாச்சு; போய் வாரும்; போய்வாரும்."



விதியும் மதியும்

சுவாமி சுத்தானந்த பாரதி

விதி, மதி — இரண்டிற்கும் எப்போதும் போட்டிதான். சிலர் விதியை நம்புவதில்லை; சிலர் மதியால் அதை வெல்ல முயல்வர். எப்படியோ திடீரென்று விழுந்து கை காலொடிகிறது; இன்பத்தைத் துன்பம் கௌவுகிறது; விதியும் வேலை செய்கிறது.

“**விவாகமானால் விதவை**” இதுதான் லீலாவதியின் ஜாதகப் பலன். இதனால் அவளது பருவ அழகைப் பார்க்கும் போதெல்லாம் தந்தை விசனித்தார். அவர் உபாத்தியாயர், கணித - சோதிட நிபுணர். தம் கலையை மகளுக்கும் நிறைவாகப் புகட்டினார். ஆண் பெண் இருபாலாரும் சமமாகக் கல்வி கற்கவேண்டும் என்பது அவர் கொள்கை. தம் பெண் பல மாணவரை விடக் கெட்டிக்காரியா யிருப்பதில் அவர் மகிழ்ந்தார். ஒரு நாள் மாணவருக்கு அவர் ஒரு கடினமான கணக்குப் போட்டார். ஒருவரும் சரியான விடை கூறவில்லை. ஒரு மாணவன் மட்டும், எழுத்தாணி பிடித்து மூளையுடன் போர் புரிந்தான்.

அப்போதுதான் லீலாவதி ஆற்றில் குளித்து வந்தாள். “அப்பா, ஏன் எல்லோரும் விழிக்கிறார்கள்?” என்று அவள் கேட்டாள். தந்தை கணக்கைச் சொன்னார். சிறிது சிந்தித்து, மனக் கணக்காகப் போட்டு, லீலாவதி சட்டென்று சரியான விடை கூறினாள். அந்த வாலிபன் வியந்தான்; அவன் விழிகள் அவள் விழிகளைக் கௌவின. கண்ணும் கருத்தும் பொருந்தின. இருவரும் காதலித்தனர்; இதைக் குருவும் அறிந்தார். ஆனால் விதி?



“ஏன் ஐயா இப்படித் தலையைக் குனிந்துகொண்டே போகிறீர்கள்?”

“ஏரோப்ளேன் எல்லாம் வரவரக் கீழேயே பறக்கிறது. தலையிலே இடித்துவிடுமோ என்றுதான்!”

உபாத்தியாயர் ஜாதகத்தைப் புரட்டினார்; ஒரு லக்னம் கிடைத்தது. அதில் தாலி கட்டினால் விதவா தோஷம் இல்லை. “வென்றேன் விதியை!” என்றெழுந்து முகூர்த்தம் வைத்து ‘டொம் டொம்’ கொட்டி விட்டார். ஒரே பெண்; புகழ் பெற்ற இடம்; ஆதலால் கலியாணத்திற்கு ஊர் திரண்டது; சீர் செய்மானங்கள் ஏராளம்; பாட்டும் விருந்தும் அமளிதான். ஆனால் தந்தை உள்ளம் மட்டும் அமைதி பெறவில்லை.

முகூர்த்த நாளில் அவர் ஒரு அண்டாவில் நீர் நிரப்பி, சிறு ஊசித் துவார முள்ள ஒரு கிண்ணத்தை அதில் மிதக்க விட்டார். கிண்ணம் பாதி நிரம்பியதும் சரியான லக்னம்; தாலிகட்ட வேண்டும். பெண் ஆவலாக அடிக்கடி கிண்ணத்தையே பார்த்து வந்தாள். நெடு நேரம் ஆனது. கிண்ணம் அப்படியே மிதந்தது. பொட்டு நீரில்லை. இரண்டு நிமிஷத்தில் நிரம்பும் கிண்ணம் இரண்டு நாழிகையாகியும் அப்படியேமிதந்தது — அதிசயம்! தந்தை பார்த்தார்; ஊசித் துவாரத்தை ஒரு முத்து அடைத்துக் கொண்டிருந்தது. அது லீலாவதி நத்தியிலிருந்து உதிர்ந்த முத்தே. வேளை போய் விட்டது. விதி வேலை செய்தது; இருந்தாலும் மனோதைரியத்துடன், என்ன வந்தாலும் சரி என்று தந்தை கலியாணத்தை நடத்தி விட்டார்.

தம்பதிகள் கொஞ்ச நாள் இந்திர போகம் அநுபவித்தனர். ஒரு நாள் கணவன் காய்ச்சல் என்று படுத்தான். ஜன்னி பிறந்தது; ஆள் கண் மூடினான். காலபாசம் அவனை இழுத்துச் சென்றது. லீலாவதி விதவையானாள். “மகளே, விசனப்படாதே; இதுகாறும் கணவன் மேல் வைத்த காதலைக் கலையின் மேல் வை” என்று தந்தை சமாதானப் படுத்தினார். இருவரும் கணித ஆராய்ச்சி செய்து கவலையை மறந்தனர். தந்தை சாத்திரம் சொல்லி மகள் எழுதினாள்; அதுவே புகழ் பெற்ற **லீலாவதி கணிதம்.**

மதிவலிய தானாலும் மாவிட வாழ்வில்
விதிவலியை யாவரே வென்றார்? — மதியுடனே
வேலை யமைத்தும், விதியமையாப் பெண்ணிற்கு
நாளை வரவறியோம் நாம்.

ரொம்ப அன்பாக இருந்தான். அவன் தாயாரும் அவனிடம் ரொம்பப் பிரியமாக இருந்தாள். அவன் காந்தனுர் ஸரஸுவுக்குப் பதினாறு வயது. இன்னும் கல்யாணம் ஆகவில்லை. அவன் மாத்திரம் ஒரு தினுசாக இருந்ததுபோலிருந்தது விமலாவுக்கு. எங்கு போனாலும் விமலா, ஸரஸு, சங்கரன் மூவரும் தான் போவார்கள்.

ஒரு நாள் ஸரஸு ஒரு சிநேகிதி வீட்டுக்குப் போயிருந்தாள். அந்தச் சமயத்தில் சங்கரன், "விமலா! ஸினிமாவுக்குப் போவோமா?" என்றான்.

"ஸரஸு இல்லையே!" என்றாள் விமலா.

அதற்குள் அவன் அம்மா, "நாளைக்கு அவள் போகட்டும்; நீயும் அவனும் இன்று போய்விட்டு வாருங்கள்" என்றாள் விமலாவைப் பார்த்து.

விமலாவும் சங்கரனும் ஸினிமாவிலிருந்து வந்ததும், ஸரஸு அவளுடன் பேசவே இல்லை. விமலாவுக்குக் காரணம் புரியவில்லை. என்னமோ பேசவில்லை என்று இருந்து விட்டாள்.

மறுநாள் காலை விமலா மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள். ஹாலில் ஸரஸு அழுது கொண்டே அம்மாவிடம் ஏதோ பேசுவது கேட்டது.

"அம்மா, பார்த்தாயா அண்ணாவை? முன்பெல்லாம் 'ஸரஸு!' என்று எவ்வளவு அன்பாக அழைப்பான்? இப்பொழுது பார்த்தாயா, ஒருதரமாவது கூப்பிடுகிறானா என்று? அவள்தான் அவனுக்கு உசத்தி. நேற்று நான் இல்லாத சமயம் பார்த்து ஸினிமாவுக்குப் போயிருக்கிறானே, எனக்கு என்ன ஸினிமாவுக்குப் போகத் தெரியாதா? மன்னி வந்ததிலிருந்து அண்ணா வேறு தினுசாக மாறிவிட்டான்" என்று தன் தாயாரிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் ஸரஸு.

அதற்கு அவள் தாயார், "போடி, பைத்தியமே! அண்ணாவாவது மாறி விட்டதாவது? நீ எங்கேயோ போய் விட்டாய். அவன் அவளை அழைத்துக் கொண்டு போனான். நீ இன்று போய் விட்டு வாயேன்" என்றாள்.

விமலாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. மன்னி வந்ததும் தன் அண்ணாவைப் பற்றி அவள் நினைத்ததெல்லாம் அப்பொழுது அவளுடைய நினைவுக்கு வந்தது. நம்கணவன் நம்மீது ஆசையாயிருப்பது போல்தானே அண்ணாவும் இருந்திருப்பான்? நமக்கும் ஸரஸுவுக்கு இருப்பதுபோல் அம்மா இருந்திருந்தால் நிலைமை அவ்வளவு மோசமாக இருந்திருக்காது" என்று அவள் தனக்குத் தானே உணர்ந்து கொண்டாள்.

அப்பொழுது, கல்யாணமாகி அவள் தன் கணவனுடன் ஊருக்கு வரும் போது, மன்னி நெற்றியில் குங்குமம் இட்டுக் கண்களில் ஜலம் ததும்ப, "விமலா! சமத்தாயிரு. முன் கோபத்தை விட்டுவிடு. அடிக்கடி தபால் எழுது" என்று சொன்னது விமலாவுக்கு ஞாபகம் வந்தது. உடனே ஜானகியைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது அவளுக்கு. இந்தச் சமயத்தில் கண்ணைத் துடைத்துக் கொண்டே சமையலறையிலிருந்து வந்த ஸரஸு விமலாவைக் கண்டதும், "ஏன், நேற்று ஸரஸுவின் நினைவில்லையோ?" என்று வெள்ளென்று விழுந்தாள்.


விமலா களுக்கென்று சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்? என்னைப் பார்த்தால் சிரிப்பாய் வருகிறதா?" என்றாள் ஸரஸு கோபமாக!

"இல்லை, ஸரஸா! உனக்கும் கல்யாணம் ஆகி, நீயும் புக்ககம் போனால் அப்பொழுது தெரியும், நான் ஏன் சிரித்தேன் என்று!" என்றாள் விமலா.

டாக்டரின் சந்தோஷம்

டாக்டர் (பிச்சைக்காரனைப் பார்த்து):— வா, அப்பா, வா! நீ ஒருவனாவது இங்கே 'பசிக்கிறது' என்று சொல்லிக் கொண்டு வருகிறாயே! ரொம்ப சந்தோஷம்!



"அது என்னமோ எனக்குத் தெரியாது. விமலா வரவில்லையாம். நானும் வரவில்லை!" என்றாள் ஜானகி.

"ஏன் விமலா? நேற்று வரவில்லையென்று கோபமா?" என்று கேட்டுக் கொண்டே இறங்கி வந்தான் ரகுநாதன்.

"எனக்கென்ன கோபம்? நேற்று நான் கூப்பிட்டதும் உனக்கு வேலையிருந்தது; இன்று மன்னி கூப்பிட்டதும் வேலையில்லை! நான் உங்களுடன் வந்தால் மன்னிக்குச் சங்கடமாயிருக்கும் போலிருக்கிறது. அதுதான் அவள் 'வருவதாயிருந்தால் வா' என்கிறாள். நான் வரப்போவது இல்லை!" என்றாள் விமலா படபடப்பாக.

"நீ ஏன் அப்படிச் சொன்னாய்?" என்று ஜானகி மீது பார்த்தான் ரகுநாதன்.

"நான் சாதாரணமாகத்தான் சொன்னேன். அது அவளுக்குக் குற்றமாகப் பட்டு விட்டது. அதற்கு நான் என்ன செய்ய முடியும்?" என்றாள் ஜானகி.

ரகுநாதனுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன விமலா! சாதாரணமாகப் பேசினால் கூடக் கோபித்துக் கொள்ளுகிறாய்? நீ என்ன, குழந்தையா?" என்றான் அவளருகில் வந்து.

"ஆமாம்; உனக்கு அவள் பேச்சு சாதாரணந்தான். நான்தான் கோபக்காரி!" என்று சொல்லும் போது விமலாவுக்கு அழுகை வந்துவிடும்போல் இருந்தது. மெள்ள அவளைச் சமாதானப்படுத்தினான் ரகுநாதன்.

என்ன சொல்லியும் விமலா அன்று கடைக்கு வர மறுத்துவிட்டாள். அப்புறம் நாலுநாள் கழித்து விமலாவின் இஷ்டப்படி கடைக்குப் போனார்கள்.

இம்மாதிரி ஜானகி வந்ததிலிருந்து விமலாவுக்கு அடிக்கடி கோபம் வந்து விடும். திடீரென்று ஒருவருடனும் பேச மாட்டாள்; சாப்பிட மாட்டாள். ஜானகி கொஞ்சம் சொல்லிப் பார்ப்பாள். அதை விமலா லட்சியம் செய்ய மாட்டாள். "சரி; தானே சரியாய்ப் போய் விடுவாள்" என்று ஜானகி பேசாமல் இருப்பாள்.

விமலாவுக்குக் கோபமில்லாமல் இருந்தால் ரகுநாதன் ஆபீஸிலிருந்து வந்ததும், "அண்ணா!" என்று குதித்துக் கொண்டு ஓடிவருவாள். கோபமாக இருந்தால் அவள் அறையில் போய்த் தலை வலி என்று படுத்துக் கொண்டு விடுவாள்.

ரகுநாதன் அவள் அறைக்குச் சென்று, "விமலா! ஏன், தலை வலியா என்ன?" என்று கேட்டுக் கொண்டே அவள் நெற்றியைத் தொட்டுப் பார்ப்பான். அதற்கு அவள், "எனக்காக உனக்கு என்ன கவலை? என்னை யார் கவனிக்கப் போகிறார்கள்? உனக்கு அவள்தான் ஒசத்தி!" என்று அழ ஆரம்பித்து விடுவாள்.

உத்தரவுப்படி!

எப்பொழுதும் வேடிக்கையாகப் பேசுபவரான ஒரு தளபதி, தமது படையைச் சேர்ந்த சிப்பாய்களுக்கு ஒரு நாள் வெற்றி விருந்து அளித்தார். அப்பொழுது அவர் உபசாரமாக, "வீரர்களே! இப்பொழுது நீங்கள் எப்படிச் சாப்பிட வேண்டும், தெரியுமா? எதிரிகளின் மீது எப்படிப் பாய்ந்து அவர்களை வதை செய்கிறீர்களோ, அப்படிச் சாப்பிட வேண்டும்!" என்று சொல்லிச் சிரித்தார்.

விருந்து முடிந்ததும் ஒரு சிப்பாய் திருட்டுத்தனமாகச் சில பட்சணங்களைப் பொட்டணம் கட்டி, தன் சட்டைப் பைக்குள் திணிக்கப் போனான். அதைக் கவனித்து விட்ட தளபதி, "என்ன அது?" என்று அவனை அதட்டினார்.

"ஒன்றுமில்லை; இப்பொழுது தங்கள் உத்தரவுப்படி வதைக்காத எதிரிகளைச் சிறைப்படுத்துகிறேன்!" என்றான் அவன்.

3

விமலா நல்ல அழகி. நன்றாகப் படித்தவள். கொஞ்சம் முன் கோபம். ஒவ்வொரு சமயம் ஜானகியிடம் ரொம்பவும் பிரியமாக இருப்பாள். விமலாவுக்கு நல்ல வரனைப் பார்த்துக் கொடுத்துவிட வேண்டுமென்று ரகுநாதன் பார்த்துக் கொண்டிருந்தான். விமலாவின் அதிருஷ்டம் நல்ல வரனைக் கிடைத்து விட்டது. மாப்பிள்ளை சங்கரனுக்கு நல்ல வேலை. இருநூறு ரூபாய் சம்பளம். விமலாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ரகுநாதன் நிறையச் சீர் வகைகள் செய்து அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தான்.

விமலா புக்ககம் வந்து ஒரு மாதம் ஆயிற்று. சங்கரன் அவளிடத்தில்

வாங்க ஜவுளிக் கடைக்குக் கூப்பிட்டான். நீயும் ஏதோ துணிகள் வாங்க வேண்டும் என்றபடியால் எல்லாருமாக நாளைக்குப் போகலாம் என்று சொன்னேன். அவனுக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. எல்லாவற்றிற்கும் முக்கிய காரணம் நீதான். அவன் எப்பொழுதும் அப்படியில்லை. நீ வந்ததிலிருந்துதான் இப்படி நடந்து கொள்கிறான். அவன் மனசு இப்பொழுதெல்லாம் சரியாயில்லை. எனக்கு அவன்மீது இருந்த பாசம் நீ வந்ததினால் குறைந்து விட்டது என்று அவன் நினைக்கிறான். எல்லாம் கொஞ்சநாள் போனால் அவனுக்கும் தெரியும். ஆனால் அதுவரை நீதான் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்."

"இதுதானே? என்னவோ ஏதோ என்று பயந்துவிட்டேன். ஏன், இன்று கடைக்குப் போக முடியாதா?"

"இல்லை, இன்றைக்கு ஒருவரைப் பார்க்கப் போகவேண்டும். நாளைக்கு ஆகட்டும்" என்று சொல்லி விட்டான் ரகுநாதன்.

2

அன்று இரவு விமலா ஒருவரோடும் கலகலப்பாகப் பேசவில்லை. சாப்பாடானதும் தலை வலிக்கிறது என்று சாக்குச் சொல்லிவிட்டுப் படுக்கைக்குச் சென்றுவிட்டாள்.

மறுநாள் சாயங்காலம் ஜானகி விமலாவைப் பார்த்து, "விமலா! டிரஸ் பண்ணிக்கொள். ஜவுளிக் கடைக்குப் போகலாம். நேற்று ஜாக்கெட்டுக்குத் துணி வாங்க வேண்டுமென்றாயே" என்றாள்.

"ஆமாம், நான் ஒன்றும் கடைக்கு வரவில்லை. நேற்று நான் கூப்பிட்டதும் வர முடியவில்லை அண்ணாவுக்கு. இன்று உனக்கு வாங்க வேண்டுமென்றதும் வர முடிகிறதாக்கும்? எனக்கு ஒன்றும் கடை தெரியாமல் போகவில்லை. நான் போய்க் கொள்ளுகிறேன்" என்றாள் விமலா.

"என்ன இது, விமலா! உனக்கு ஏன் இவ்வளவு கோபம்? நேற்று உன் அண்ணாவுக்கு வர சௌகர்யப் படவில்லைபோல் இருக்கிறது. இன்று போனால்தான் என்ன?"

"நீ ஒன்றும் எனக்குச் சமாதானம் சொல்ல வேண்டாம்!"

"நான் ஒன்றும் குற்றமாகச் சொல்லவில்லை. நீ வருவதாயிருந்தால் வா. போவோம்!"

"நான் வருவதாயிருந்தால் தானே வர வேண்டும்? நான் வரவில்லை."

இவர்கள் இப்படித் தர்க்கம்பண்ணிக் கொண்டிருக்கையில் ரகுநாதன் மாடியிலிருந்து, "என்ன, கிளம்பியாச்சா?" என்று கேட்டான்.



தனக்கு வந்தால் தெரியும்!

சௌந்தரம்

ரகுநாதன் ஆபீஸிலிருந்து வந்து சட்டையைக் கழற்றிக் கொண்டிருந்தான். "அண்ணா! வாங்கிக் கொண்டு வந்தாயா?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் விமலா.

"என்ன அது? என்னமோ நூல் என்று சொன்னாயே, அதுதானே? என்ன கலர்? அது மறந்துபோய் விட்டதே. இன்றைக்கு மறந்து விட்டேன். நாளைக்கு அவசியம் ஞாபகப்படுத்து. கலரையும் எழுதியாவது கொடு. வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்றான் ரகுநாதன்.

"ஆமாம்! உனக்கு நான் சொன்னால் ஞாபகம் இருக்குமா, என்ன? அவள் சொன்னால் உடனே வாங்கிக் கொண்டு வருவாய்!"

"நீ என்ன கேட்டு நான் வாங்கித் தரவில்லையோ, தெரியவில்லை! மறந்து போய் விட்டால் பிரமாதப்படுத்துகிறாயே!"

"சரி, அதுதான் மறந்து போய் விட்டது. எனக்கு ஜாக்கெட் துணிகள் வாங்க வேண்டும். ஜவுளிக் கடைக்குப் போகலாம், வருகிறாயா?"



"இல்லை, விமலா! நான் இப்பொழுது வர முடியாது. நாளைக்கு அவசியம் போகலாம்."

"நான் சொன்னால் வருவாயா? ஜானகி ஸினிமாவுக்குப் போகவேண்டுமென்றால் உடனே கிளம்பி விடுவாய்!" என்று விமலா சொல்லிக்கொண்டிருந்த போது, அதைக் கேட்டுக் கொண்டே கையில் காப்பியுடன் உள்ளே வந்தாள் ஜானகி. அங்கே விமலாவைக் கண்டதும், "என்ன, ஸினிமாவுக்குப் போக வேண்டுமா?" என்றாள் அவள்.

"ஆமாம்; அண்ணா ஸினிமாவுக்குப் போகப் போகிறானாம், நீயும் கூடப் போ!" என்று படபடப்பாகச் சொல்லிவிட்டு வெளியே வந்துவிட்டாள் விமலா.

அவள் போனதும் ஜானகி, "என்ன இது? விமலா ஒரே கோபமாக இருக்கிறாளே?" என்றாள்.

"எல்லாம் உன்னால் வந்ததுதான்" என்றான் ரகுநாதன்.

"என்னால் என்னவாம்? நான் அவளைக் கோபித்துக் கொள்ளச் சொன்னேனா? நீங்கள் இப்படியெல்லாம் சொன்னால் நானும் கோபித்துக் கொண்டு விடுவேன்!"

"வேண்டாம், ஜானகி தேவி! கோபித்துக் கொண்டு விடாதே. இந்தப் பொம்மனாட்டிகளே இப்படித்தான். ஒன்றுமில்லாததற்கெல்லாம் கோபம், அழுகை எல்லாம் வந்துவிடும்!"

"பொம்மனாட்டிகளைக் கண்டு பயப்படுகிறவர்கள் ஏன் அவர்களைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்?"

"இல்லை; கல்யாணம் ஆவதற்குமுன் பயப்படவில்லை. ஆன பிறகுதான் பயப்பட வேண்டியிருக்கிறது."

"நீங்கள் ரொம்பத்தான் பயப்படுகிறவர்கள்.........போகட்டும், விமலாவுக்கு என்ன கோபம்?"

"நான் ஆபீஸுக்குப் போகும்போது ஏதோ கலர் நூல் வாங்கிக் கொண்டு வரச் சொன்னாள். வாங்கிக் கொண்டுவர மறந்து விட்டேன். ஜாக்கெட் துணி

பலசரக்கு

அமெரிக்கக் குடியரசுத் தலைவராயிருந்த அப்ரஹாம் லின்கன் ஒரு சமயம் தன் எதிர்க்கட்சியாரைப் பாராட்டிச் சில வார்த்தைகள் சொன்னாராம். அதைக் கேட்ட ஒரு பெண்மணி ஆத்திரத்துடன்



"நம் சத்துருக்களை நீங்கள் எப்படிப் புகழலாம்—அவர்களை ஒழித்துத் தள்ளுவதற்கு இல்லாமல்?" என்று அவருடன் சண்டைக்கு வந்து விட்டாளாம். "எப்பொழுது நான் அவர்களை என் சிநேகிதர்களாக்கிக் கொள்கிறேனோ, அப்பொழுதே நான் அவர்களை ஒழித்துத் தள்ளிவிட்டது போல் ஆகவில்லையா?" என்றாராம் லின்கன்.

★

சில வருஷங்களுக்கு முன் ஒரு ஆதினத்தில் மிகவும் ரஸிகரும் பெரிய அறிவாளியுமான ஒரு பண்டார சந்நிதி விளங்கி வந்தார். அவருடைய காலத்தில் தமிழ்ப் புலவர்கள், சங்கீத வித்வான்கள் முதலான எல்லோருக்கும் அதிகச் சலுகை ஏற்பட்டிருந்தது. ஆதினத்தில் குருபூஜை நடக்கும் காலங்களில் அப் பண்டார சந்நிதி விசேஷமான வித்வத் சபைகள் கூட்டி ஏராளமான சன்மானங்களை வித்வான்களுக்கு வழங்கி வந்தார்.



இம்மாதிரி சபை கூடியிருந்த ஒரு சமயத்தில் "கடை மடை" என்ற கிராமத்திலிருந்து வந்திருந்த ஒரு புலவர் சற்றுத் தாமதமாகச் சபைக்கு வந்தார். அவரைச் சற்று ஏளனமாய் வரவேற்க எண்ணிய பண்டார சந்நிதியவர்கள் புன்முறுவலுடன் "வாரும், கடை மடையரே!" என்றார். சபையோரும் சற்று நகைத்து விட்டார்கள். புலவரோ தன்னுடைய ஏமாற்றத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மந்தஹாஸத்துடன் மறு கணத்திலேயே "வந்தேன், மடந் தலைவரே!" என்று விடையளிக்க அவையோர் அனைவரும் தங்களையும் மீறி உரக்கச் சிரித்துவிட்டார்கள். ரஸிகசிகாமணியான பண்டார சந்நிதி அவர்களும் எல்லோருடனும் சேர்ந்து நகைத்தார்.

போர்ச்சுகல் தேசத்தில் உள்ள லிஸ்பன் நகரவாசி ஒருவருக்கு அமெரிக்காவுக்குப் போக வேண்டுமென்று ஆசை உண்டாகி விட்டது. உடனே அவர் அந் நகரிலுள்ள அமெரிக்க ஸ்தானாதிபதியை அணுகித் தமக்குப் பிரயாண வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இப்படி ஆயிரக் கணக்கான பேர்கள் அந்த ஸ்தானாதிபதியைத் தொந்தரவு



செய்து கொண்டிருந்ததால் மிகவும் அலுத்துப் போயிருந்த அவர், அந்த ஆசாமியைப் பார்த்து எரிச்சலுடன் "போமய்யா போம்! இந்த யுத்தமெல்லாம் முடிந்து இன்னும் பத்து வருஷகாலம் கழித்து வாரும்; ஏற்பாடு செய்கிறேன்" என்று விடை கூறி அனுப்பினார்.

லிஸ்பன் நகரவாசி பதில் பேசாமல் போய்விட்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் அவர் திரும்பிவந்தார். "எங்கே வந்தீர்?" என்று கேட்டார் ஸ்தானாதிபதி.

"நீங்கள் பத்து வருஷம் கழிந்து வரச் சொன்னீர்களல்லவா?"

"ஆமாம்."

"காலையில் வரட்டுமா, அல்லது மாலையில் வரட்டுமா, என்று கேட்கவே திரும்பிவந்தேன்" என்றார் அந்த ஆசாமி.

★

ஒரு விருந்தில், ஒரு பெண்மணி ஒரு ராஜதந்திரியைப் பார்த்து, "எனக்கு என்ன வயது இருக்கும், சொல்லுங்கள் பார்க்கலாம்?" என்றாளாம். அவள் நிஜ வயதைச் சொன்னால் கோபம்



வந்து விடுமே, என்ன செய்வது என்று அந்த ராஜதந்திரி ஒரு கணம் யோசித்தார். பிறகு, அவர் அந்த மாதைப் பார்த்து, "எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. தங்கள் அழகைப் பார்த்தால் பத்து வயது குறைத்துச் சொல்ல வேண்டும் போல் இருக்கிறது! தங்கள் அறிவைப் பார்த்தாலோ பத்து வயது கூட்டியே சொல்ல வேண்டும் போலிருக்கிறது" என்று கூறினாராம்.

இந்தியத் தேயிலையில் மிகச் சிறந்தது



மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் தேயிலை பெண் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.



லிப்டன்ஸ் தேயிலை பெண்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 G

ஆனந்தமாக லிப்டன் தேனீர் அருந்தும்போது பொறுப்பற்ற பேச்சுகளைப் பேசாதீர்கள்.



ஒன்றினி யுரைப்பின், என்
உயிரை நீக்குவென்'

என்றனன்; என்றபோ(து),—
இருந்த பேரவை.

[நின்று இனிது இருந்தவம் நெறியின் ஆற்றுவென்: சலியாமல் அரிய தவத்தை முறைப்படி செய்து கொண்டிருப்பேன்; ஒன்று இனி உரைப்பின்: நீங்கள் ஏதாகிலும் மறுத்துச் சொன்னீர்களானாலும்: என்றனன்: என்று அழுத்தமாய்ச் சொல்லி நிறுத்தினான்.]

பரதனது மன உறுதியைக் கண்டு கொண்டார்கள் சபையோர்கள். அவர்களிடமிருந்து வரும் ஆரவாரத்தைப் பாருங்கள்:

'ஆழியை உருட்டியும்
அறங்கள் போற்றியும்

வேள்வியை இயற்றியும்
வளர்க்க வேண்டுமோ!

ஏழினே(டு) ஏழ்எனும்
உலகும் எஞ்சினும்

வாழிய நின்புகழ்!'
என்று வாழ்த்தினர்

[ஆழியை உருட்டியும்: புகழைச் செய்து கொள்ளுவதற்குச் சக்கரவர்த்தியாய் இருக்க வேண்டுமா — அவசியமில்லை: ஏழினேடு ஏழ்எனும் உலகும் எஞ்சினும்: பதினான்கு உலகங்களும் அழிந்து போனாலும்: வாழிய நின்புகழ்: உன் புகழ் என்றென்றும் வாழக் கடவது.]


தியாகம் என்பது ஒரு தத்துவம்: ஒரு அரிய தத்துவம். அதைப் பார்த்த மாத்திரத்தில் யாருக்கும் ஆனந்தம் உண்டாகிறது. பரதனது தியாகத்தைப் பார்த்தார்கள் சபையோர்கள். அப்படியே ஆனந்த வெள்ளம் பொங்குகிறது. பேராரவாரத்தின் தொனியே கம் காதில் விழுகிறது.

○

விடுமுறை விளக்கெண்ணெய்

தாயார்:—சமத்தோல்லியோ. படுத்தாமல் இந்த விளக்கெண்ணெயைக் குடித்து விடு. உன்னைப் பார்த்தாவது அப்பாவும் சமத்தாகக் குடிக்கட்டும்!

○



கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

70. ஆனந்தத்தின் தொனி

வசிஷ்டர் முதலான வைதிகர்கள் ராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பரதனிடம் சொன்னார்கள். அவனுக்கோ ஆங்காரம் பிறந்து விட்டது. 'படிப்பெல்லாம் இப்படிச் சொல்லத்தானா உதவியது? உங்களுக்கும் கைகேசிக்கும் வித்தியாசமேயில்லை' என்று கடிந்து சொல்லி விட்டான். அதன் பிறகு அடுத்தாற் போலிருந்த அரசர்கள் கூட்டத்தைப் பார்த்துப் பேசுகிறான்.

உங்களுக்கு அரசர்களுடைய பரம்பரை இன்னதென்று தெரியும். விஷ்ணு மூர்த்தியின் நாபிக் கமலத்தில் பிறந்தான் பிரமன். பிரமன் வயிற்றில் பிறந்த மனு என்ன, இன்னும் அந்த வமிசத்தில் சேர்ந்த மன்னர்களென்ன, அவர்களுடைய வரலாறு எல்லாம் உங்களுக்குத் தெரியும்.

'வேத்தவை இருந்தநீர்,
விமலன் உந்தியில்ப்
பூத்தவன் முதலிய
புவியுள்த் தோன்றினர்,—
மூத்தவர் இருக்கவே,—
முறைமை யால்நிலம்
காத்தவர் உளர்எனில்,
காட்டிக் காண்டிராய்.'

[வேத்தவை இருந்தநீர்: வேந்தர் கூடமாகிய நீங்கள் — வேதியர் கூடத்தை விட்டு அரசர்கள் இருந்த கூடத்தை நோக்கிப் பேசுகிற பாவம்; விமலன் உந்தியில்ப் பூத்தவன்: விஷ்ணு மூர்த்தியின் திருவயிற்றில் பிறந்த பிரமன்; புவியுள்த் தோன்றினர்: தெய்வ அம்சமாக உலகத்தில்த் தோன்றிய அரச வர்க்கம்; மூத்தவர் இருக்கவே; பிறப்பால் மூத்தவர்கள் இருக்கும் போது அவர்களை ஒதுக்கி விட்டு; முறைமையால் நிலம் காத்தவர் உளர் எனில்: ஏதோ ஒழுங்கு என்று சொல்லும்படி அரசாண்டவர்கள் உண்டென்றால்; காட்டிக் காண்டிராய்: எடுத்துச் சொல்லி விளக்குங்கள் பார்க்கலாம்.]

நீங்கள் சொல்லுகிற முறை ரொம்ப நன்று இருக்கிறது! ரொம்ப அழகாகவும் இருக்கிறது! இந்த ராஜ்யத்திலுள்ள மக்களைப் பாதுகாக்கிற காரியமிருக்கிறதே அது என்னால் முடியாத காரியம்.

'நன்னெறி! அழகிது!
யான்இந் நாவில
மன்னுயிர்ப் பொறைசுமந்(து)
இருந்து வாழ்கிலேன்:
அன்னவன் தனைக்கொணர்ந்(து)
அலங்கல் மாமுடி
தொல்நெறி முறைமையில்ச்
சூட்டிக் காண்டிராய்'

[நாவில மன்னுயிர்ப் பொறை: ராஜ்யமாகிற மக்களைக் காக்கிற கடமை; அன்னவன் தனைக் கொணர்ந்து: அந்த ராமனையே இங்கே அழைத்து வந்து; அலங்கல் மாமுடி: பூமாலை சூடிய கிரீடத்தை; தொல் நெறி முறைமையில்: பூர்வமான பாரம்பரிய முறையில்; சூட்டிக் காண்டிராய்: சூட்டியே தீர வேண்டும்;]


ராமனுக்கு நீங்கள் முடிசூட்டாமல்ப் போனால் நான் என்ன செய்வேன் என்பதைச் சொல்லுகிறேன்: காட்டுக்குப்போய்ச் சேவகரியமாகத் தவம் செய்ய ஆரம்பிப்பேன். அவ்வளவுதான்.

அன்(று)எனில், அவனொடும்
அரிய கானிடை
நின்றினி(து) இருந்தவம்
நெறியின் ஆற்றுவென்;



யுத்த டீ
ஒவ்வொரு போர் முனையிலிருந்தும்—எந்நேரத் இடத்தில் மனுஷ்யனின் தைரியம், பொறுமை இவைகளின் விசேஷத்தை அவசரமாகக்கோருகிறதோ—அவ்விடமிருந்தெல்லாம் ஐக்கிய நாடுகளின் போர் வீரர்களுக்கு டீ அளிக்கும் விசேஷ குணங் களைப்பற்றிய செய்திகள் வருகின்றன. யுத்தத்திலும் சரி, சமாதானகாலங்களிலும் சரி, டீ சிறந்த கெடுதல் இல்லாத சௌகரியமளிக்கும் பானம் என்பதை நிரூபிக்கிறது.
கடினமான காலங்களில்
இந்தியன் டீ அருந்துங்கள்
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது
IK 221

"நரிகளே, இக் கூட்டம் கூடியதற்குக் கைமேல் பலன் கிடைத்து விட்டது. நீங்கள் யாவரும் ஐந்து நிமிஷம் பேசாமலிருந்து கடவுளை நினைத்து இன்று முதல் ஜீவ ஹிம்சை செய்வதில்லை என்று பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்ல, எல்லா நரிகளும் அதன் படியே செய்தன. கிழ நரியும் அந்த விரதத்தில் கலந்து கொண்டது. கிழ நரி மேலே ஏதோ பேச ஆரம்பித்த பொழுது எங்கிருந்தோ 'கொக்கரக்கோ' என்று ஒரு சப்தம் கேட்டது. எல்லா நரிகளும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன.



ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் மறுபடியும் "கொக்கரக்கோ, கொக்கரக்கோ! என்று கூவும் சப்தம் கேட்டது. உடனே ஒவ்வொரு நரியாகக் கூட்டத்தை விட்டு மெதுவாக நகர ஆரம்பித்தன. அங்கு கூடியிருந்த நரிகள் யாவும் ஒவ்வொன்றாகக் கிழ நரியைத் தனியே விட்டு விட்டு ஜன்னல் வழியாய்க் குதித்து ஓட ஆரம்பித்தன. கிழ நரி மாத்திரம் தனியாக உட்கார்ந்து ஏதோ யோசித்த வண்ணமிருந்தது. அப்பொழுது விடியற்கால சமயமாகையால் "அம்மே" என்று ஒரு ஆட்டுக்குட்டியின் மெல்லிய குரல் கேட்டது. இந்தக் குரலைக் கேட்டது தான் தாமதம்! கிழ நரி இங்கும் அங்குமாகப் பார்த்துக் கொண்டு ஜன்னல் வழியாகக் குதித்து ஆட்டுக் குட்டியின் குரல் வந்த திக்கை நோக்கி ஓடிற்று. ஆனால் கிழ நரி அங்கு ஆட்டுக் குட்டியைக் காணாமல் ஏமாந்து நின்றது.

"ஏன்? உங்களைத் தானே! நான்தான் கூப்பிடுகிறது; ஏமாந்து போனேனா?" என்று குரலைக் கேட்ட கிழ நரி திரும்பிப் பார்த்தது. அப்பொழுது அங்கே தன்னுடைய மனைவி நிற்பதைப் பார்த்தவுடன் கிழ நரிக்குத் தூக்கிவாரிப் போட்டது. கிழ நரியின் மனைவி "போதும் போதும் உங்கள் கூட்டமும் விரதமும். இன்னும் பொழுது விடிய வெகு நேரம் இருக்கிறது. கோழி கூவவில்லை. உங்கள் பேச்சைக் கேட்டுக் கரகோஷம் செய்த நரிகளைப் பரிசோதிப்பதற்காகவே நான் கோழி மாதிரி கூவினேன். விரதம் செய்து கொண்ட நரிகள் நிஜமான கோழியின் குரல் என்று நினைத்துக் கோழியைப் பிடிக்க எல்லாம் ஓடி வந்தன. அதோ பாருங்கள்! எல்லா நரிகளும் கோழியைத் தேடிக் கொண்டு அலைகின்றன!" என்று சுட்டிக் காண்பித்தது.

கிழநரி அதற்கு "அவைகளெல்லாம் முட்டாள் நரிகள். நான் எப்படி இருந்தேன் பார்த்தாயா?" என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டது. அதற்கு அதன் மனைவி "உங்கள் பெருமையையும், பொறுமையையும் பரிசோதிக்கத்தான் நான் ஆடுமாதிரி கத்தினேன். நிஜ ஆடுதான் வந்து விட்டது என்று நீங்களும் ஆட்டைப் பிடிக்க வேகமாக ஓடி வந்து ஏமாற்றமடைந்ததை நான் தான் இப்பொழுது பார்த்தேனே?" என்று சொல்லிச் சிரித்தது. கிழ நரி மெல்லிய குரலுடன் "நீதான் ஆட்டுக் குட்டி மாதிரி கத்தினையோ?" என்று முகத்தில் அசடு வழியக் கேட்டது.

அப்பொழுது 'அம்மே' என்று நிஜமாகவே ஒரு ஆடு கத்தியதைக் கூட அது கவனிக்காதது போல் இருந்தது.







காலக்ஷேபம்

ஐந்தே நிமிஷம்!

எஜமானி (சமையற்காரனிடம் நய மாக):—என்ன செய்வது? உமக்கு மறு படியும் சிரமம் கொடுக்க வேண்டியிருக் கிறது. இரண்டு பேரை அவர் சாப் பாட்டுக்கு அழைத்து வருவதாக இப் போதுதான் டெலிபோனில் சொன் ஞர். அரைப்படி அரிசியைக் களைந்து போட்டு, சட்டென்று ஒரு ரஸம்



வைத்து, நான்கு அப் பளம் பொரித்து வைத் தால் போதும். எல்லா வற்றிற்கும் ஒரு மணி நேரம் போதாதா?

சமையற்காரர்:—ஒரு மணி நேரம் எதற் கம்மா? ஐந்தே நிமிஷத்தில் தயார் தான்!

எஜமானி:—என்ன? ஐந்தே நிமி ஷத்தில் தயாராகிவிடுமா? அதெப்படி?

சமையற்காரர்:—இல்லை, முன்னொரு தடவை நீங்கள் இப்படிச் சொன்ன போதே என் சாமான்களை யெல்லாம் எடுத்துத் தயாராகக் கட்டி வைத்து விட்டேன். இப்பொழுது என் பாக்கிச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு உடனே புறப்பட வேண்டியது தான்.

—என். வி. துரைசாமி.

●

நல்ல காரணம்

டாக்டர்:—நான் கொடுத்த மருந்தால் உங்கள் குழந்தைகளுக்கு இருமல் தீர்ந்ததா?



சங்கம்மாள்:— நன் ருய்த் தீர்ந்தது. நேற்று காலை முதல் ஒரு பைய னாவது இருமவில்லை.

அந்த மருந்தின் கசப் புக்குப் பயந்து இருமு வதையே விட்டு விட்டார்கள்.

— ஜி. சீனிவாசன்.

கச்சேரியா வேண்டும்?

ஓர் ஆபீஸில் குமாஸ்தா ஒருவர் மெது வான குரலில் பாடிக்கொண்டேயிருந் தார். இதைக் கேட்டுக்கொண்டே வந்த



மானேஜர் சற்றுக் கோப மாக "ஏன் இன்னும் சற்று உரக்கப் பாடு மேன்" என்ருர்.

உடனே அந்த குமாஸ்தா "இந்த ஆபீஸில் நீர் சம் பளம் கொடுக்கும் லட்சணத்திற்குக் கச்சேரி கூடச் செய்யச் சொல்வீர்கள்" என்ருர். —கே. சீனிவாஸன்.

●

வாங்கி வந்தது!

மனைவி:— ஆமாம்; பீச்சுக்குப் போய்ட்டு வந்தீர்களே, என்ன வாங்கிக்கொண்டு வந்தீர்கள்?



கணவன்:— நல்ல காற்று வாங்கிக்கொண்டு வந்தேன்!

—கே. சுப்பிரமணியம்.

●

செல்லுமா?

சைனுபஜார் ரோடில் ஒருவர் தன் பையனுடன் டிராமில் வந்து கொண் டிருந்தார். தன் தகப்பனர் கையில் வைத்திருந்த டிக்கட்டைப் பார்த்து அந்தப் பையன் 'அப்பா! இந்த டிக் கட்டின் அடியில் என்ன அப்பா எழுதி யிருக்கிறது?' என்று கேட்டான்.



தகப்பனர்:—அதுவா 'என்றைய தினம் டிக் கட் வாங்கி யிருக்கி ருேமோ அன்றைய தினம் அது செல்லும்' என்று எழுதி யிருக்கிறது.

பையன்:— அப்படியானல் நாம் மைலாப்பூர் போகும்வரையில் இந்த டிக்கட் செல்லுமா அப்பா!'


—ஆர். எல். காந்தன்.



நரிகளின் விரதம்

ராஜி

"இதனால் இக்காட்டிலுள்ள சகல நரிகளுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், இன்று இரவு எட்டு மணிக்கு 'ஜீவ ஹிம்சை கூடாது' என்னும் விஷயத்தைப்பற்றி இக் காட்டு நாட்டாமைக்காரக் கிழ நரியார் மாந்தோப்பில் ஓர் உபன்யாசம் செய்வார். அதற்கு எல்லா நரிகளும் வரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்" என்று ஒரு நரி தண்டோராப் போட்டுக் கொண்டே போயிற்று. இதைக் கேட்ட மற்ற நரிகள் "கூட்டம் எந்த இடத்தில்?" என்று தண்டோராப்போட்ட நரியை விசாரித்தன. "மாந்தோப்பில் இருக்கும் பழைய வீட்டில்" என்று நரி பதில் சொல்லிவிட்டு "டம்,டம், டும்,டும்" என்று தமுக்கை அடித்துக் கொண்டே போய்விட்டது.



குறிப்பிட்ட இடத்தில் அன்று இரவு காட்டிலுள்ள நரிகள் எல்லாம் உபன்யாசத்தைக் கேட்கத் திரள் திரளாகக் கூடின. நாட்டாமைக்காரக் கிழ நரியார் கூட்டத்திற்கு வந்தவுடன் எல்லா நரிகளும் கர கோஷம் செய்தன. கூட்டத்தில் ஒரு நரி எழுந்து வந்து நரியாருக்கு மாலை போட்டது. கிழ நரியார் எழுந்திருந்து கூட்டம் கூடியதின் நோக்கத்தைப் பற்றியும் இது மாதிரியான கூட்டங்கள் அடிக்கடி நடக்க வேண்டுமென்றும் விரிவாகச் சொன்ன பிறகு, "இங்கு கூடியிருக்கும் நரியார்களே! நம்மிடத்திலுள்ள கெட்ட வழக்கங்களை நாம் இனி விட்டுவிட வேண்டும். நம் இனத்தார்களை இந்த மனிதர்கள் "திருடர்கள்" என்று கேவலமாக அழைக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லும்படி நாம் ஏன் அம்மாதிரி நடந்து கொள்ள வேண்டும்? நமக்குப் பயந்துகொண்டு அவர்கள் ஏன் வாத்துக்களையும், கோழிகளையும், ஆட்டுக் குட்டிகளையும் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்? நாம் திருட்டுத்தனமாக அவைகளை இரவில் தேடிக்கொண்டு அலைவதால்தானே? அதுவுமின்றி நம்மைப்போல உயிருள்ள பிராணிகளைக் கொன்று தின்பது பாபமல்லவா?" என்று பிரசங்கம் செய்துகொண்டிருக்கும்பொழுது ஒரு நரி குறுக்கிட்டு,

"ஆமாம், ஆமாம். நீங்கள் சொல்லுவது வாஸ்தவம்தான். இப்பொழுது யானைகள் இருக்கின்றனவே! அவைகளெல்லாம் மாமிசத்தையா சாப்பிடுகின்றன? அதைப்போல நாமும் மாமிசத்தை விட்டு ஒழிக்க வேண்டியதுதான்" என்றது.

"யானை என்ன? இன்னும் எவ்வளவோ மிருகங்கள் ஜீவஹிம்சை செய்யாமல் இருக்கவில்லையா? அப்படி இருக்க, நாம் மட்டும் இக்கொடிய பழக்கத்தை வைத்துக் கொண்டிருப்பானேன்? இக் கூட்டம் கூடியதற்குப் பலனாக நாம் யாவரும் ஜீவஹிம்சை செய்வதில்லை என்று இன்றைக்கே ஒரு விரதம் எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டது கிழநரி. மற்ற நரிகள் யாவும் கிழ நரியாரைப் புகழ்ந்து பேசிவிட்டுக் கிழநரியார் சொல்படி தாங்கள் இனிமேல் நடப்பதாக வாக்குறுதி அளித்தன. இதைக்கேட்ட கிழநரியார் சந்தோஷமடைந்தது.

ரயில் டிக்கட் வாங்குவதிலுள்ள கஷ்டங்கள்



அது ஒரு காலம்; நீங்கள் புக்கிங் ஆபீசுக்குள் நுழைந்து ஜன்னல் திறந்தவுடன் சில நிமிஷங்களில் டிக்கட் சுலபமாகப் பெறக்கூடிய காலம் இருந்தது. கூட்டமில்லை. கஷ்டமில்லை. தொந்திரவில்லை. அந்தக்காலம் மலையேறிவிட்டது. இப்பொழுது நீங்களும் கும்பலோடு கும்பலாகச் செல்லவேண்டும்; ஒரு டிக்கட் வாங்க 15, 20 நிமிஷங்கள் கூட ஆகலாம். இதற்கிடையில் ஒரு கூலியை அமர்த்தி காவல் வைக்காவிடில் உங்கள் சாமான்களை திருடர் கொண்டுபோய்விடலாம். ஆனால் கூலிகள் கிடைப்பதுதான் குதிரை கொம்பாகிவிட்டதே இன்று! இத் தொந்திரவு மட்டுமா? டிக்கட் கிடைத்தாலும் இடம் கிடைக்க வேண்டுமே! வழியில் சாப்பாடு கிடைக்க வேண்டுமே! அதற்கு எவ்வளவு தொல்லைகள். விஷயம் தெரிந்தவர்கள் இந்தத் தொல்லையே வேண்டாமென்று இருந்து விடுவார்கள். முக்கியமாக ஸ்திரீகளுக்கு இன்றைய ரயில் பிரயாணம் மிகவும் கஷ்டமானது. புத்திசாலியானவரும் அவசியமிருந்தாலொழிய இன்று பிரயாணம் செய்யமாட்டார்கள். நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் புத்திசாலிகளாக இருங்கள். வீட்டைவிட்டு வெளியூருக்கு கிளம்பாதீர்கள். பணத்தையும் மிச்சப் படுத்தலாம். தொந்திரவும் தொல்லைகளும் இல்லை

பிரயாணத்தைக் குறையுங்கள்

R.A.A. 679 TM.

ஏனென்றால், சக்கரவர்த்தி தங்களைப் பற்றி ஏதாவது பேசாத நாள் கிடையாது. தங்களுடைய அறிவையும், வீரத்தையும் பற்றிப் பாராட்டாத நாள் கிடையாது. அதனால், எனக்கும் தாங்கள் புதியவராகத் தோன்றவில்லை.''

அப்போது குமார சக்கரவர்த்தி பரஞ்சோதியின் கரங்களை இறுகப் பிடித்துக் கொண்டு, "தளபதி! அப்படியானால் நான் பாக்கியசாலிதான். வள்ளுவர் வாக்கு நம் விஷயத்தில் உண்மையாயிற்று.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்' *

என்று தமிழ் மறை சொல்கிறதல்லவா?'' என்றார்.


அதற்குப் பரஞ்சோதி "பல்லவ குமாரரே! மன்னிக்கவேண்டும். நான் கல்வி அறிவு என்பதே இல்லாதவன். பள்ளிக்கூடத்தின் நிழலில்கூட ஒதுங்காதவன். வள்ளுவரையும் அறியேன்; அவருடைய குறளையும் அறியேன். எனக்குக் கல்வி புகட்டும் பொறுப்பைத் தங்களுக்குச் சக்கரவர்த்தி அளித்திருக்கிறார். ஓலையைப் படித்துப் பார்த்தால் தெரியும்'' என்றான்.

குமார சக்கரவர்த்தி சிறிது கூச்சத்துடன், "அதற்கென்ன, தளபதி! சக்கரவர்த்தியின் கட்டளை எதுவானாலும் சந்தோஷமாக நிறைவேற்றி வைக்க நான் கடமைப்பட்டவன்...'' என்பதற்குள், பரஞ்சோதி, "ஆனால், எனக்குக் கல்வி கற்பிக்கும்படி சக்கரவர்த்தி தங்களுக்கு ஆக்ஞை இட்டிருப்பது என்னுடைய நன்மைக்காக அல்ல. தங்களுடைய நன்மைக்காகத்தான்'' என்றான்.

மாமல்லர் ஒன்றும் விளங்காமல் பரஞ்சோதியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க, அவன் மேலும் சொல்வான் :—"ஆம், பிரபு! தங்களிடத்தில் எல்லா நல்ல குணங்களும் இருக்கின்றனவாம்; ஆனால் பொறுமையும் நிதானமும் மட்டும் குறைவாம். எனக்குக் கல்வி புகட்ட ஆரம்பித்தீர்களானால், உங்களுக்குப் பொறுமை வந்து விடுமாம்! என்னுடைய அறிவுக் கூர்மையில் சக்கரவர்த்திக்கு அவ்வளவு நம்பிக்கை!'' என்றதும், மாமல்லர் குபீரென்று சிரிக்க, அதைப் பார்த்துப் பரஞ்சோதி சிரிக்க, இருவரும் சிரிப்பதைப் பார்த்து அடக்கி அடக்கிப் பார்த்தும் முடியாமல் சாரதி கண்ணபிரானும் சிரிக்க, இந்தக் கோலாகலம் என்னத்திற்கு என்று தெரியாமல் ரதத்தை இழுத்துச் சென்ற குதிரைகளும் கனைத்தன.

குதிரைகள் தங்களுக்குக் கடாவமான இனிய குரலில் கனைப்பதைக் கேட்டு மறுபடியும் ஒரு ஆவர்த்தம் மூவரும் சிரித்தார்கள்.

"பிரபு! இதுதான் ஏகாம்பரர் சந்நிதியா?'' என்று பரஞ்சோதி கேட்டதும் சிரிப்பு நின்றது.



* 'சாதாரணமாக, ஒருவரோடொருவர் கூட இருந்து கலந்து பழகுவதினால் நட்பு உண்டாகி வளருகிறது. ஆனால், இரண்டு பேருக்குள் ஒத்த உணர்ச்சி இருக்கும் பட்சத்தில், கலந்து பழகுதல் இல்லாமலே சிநேக பாத்தியம் ஏற்பட்டுவிடும்.'

மறுத்து விட்டார். 'அப்படியானால், வாரா வாரம் போர்க் களத்தில் நடப்பதையெல்லாம் விவரமாக எழுதி யனுப்ப வேண்டும்' என்று கேட்டுக் கொண்டேன். அந்தப்படியே சக்கரவர்த்தி எழுதி அனுப்பி வருகிறார். தளபதி! இன்றைக்குத்தான் நான் உம்மை முதன் முதலில் பார்த்திருக்கிறேன். ஆனாலும் நீர் எனக்குப் புதியவர் அல்ல; சக்கரவர்த்தி அனுப்பி வந்த ஓலைகளின் மூலமாக உம்முடன் சென்ற எட்டுமாதமும் பழகி வந்திருக்கிறேன். உம்முடைய வீரச் செயல்களில் எல்லாம் நானும் கலந்து கொண்டிருக்கிறேன். உம்மை இன்று பார்த்ததும், புதிய மனிதராகவே எனக்குத் தோன்றவில்லை. வெகு காலம் பழகிய பழைய சிநேகிதராகவே தோன்றியது......"

"பிரபு! எனக்கும் அப்படியேதான் தோன்றியது. இனிப் பிள்ளையைப் போல் தாங்கள் சொன்னதையே திருப்பிச் சொல்வதாக நினைக்க வேண்டாம், உண்மையில், அப்படித்தான்.



காஞ்சி வரையில் வந்து எட்டியிருக்கிறதா?'' என்றான் பரஞ்சோதி.

''ஏன் எட்டவில்லை? வாரந்தோறும் சக்கரவர்த்தி அனுப்பிய ஓலைகளிலிருந்து உம்முடைய வீரச் செயல்கள் எல்லாம் தெரிய வந்தன. தெரிந்த விவரத்தைப் பறையறைந்து நாடு நகரமெல்லாம் தெரியப்படுத்தினோம்.''

''ஆஹா! தங்களுடைய அன்பினால் எப்படி மெய் மறந்து போனேன் பார்த்தீர்களா? கலியாணச் சந்தடியில் தாலியை மறந்ததுபோலல்லவா ஆகிவிட்டது! சக்கரவர்த்தி கொடுத்த ஓலையைத் தங்களிடம் கொடுக்க மறந்து போனேனே?'' என்று கூறிக் கொண்டே பரஞ்சோதி இடுப்பில் பத்திரமாகச் செருகியிருந்த ஓலைக் குழாயை எடுத்துக் கொடுத்தான்.

''தளபதி! இது சக்கரவர்த்தி கொடுத்த ஓலைதானே? எங்கேயாவது வழி நடுவில் ஓலை மாறிவிடவில்லையே?'' என்று மாமல்லர் சிரித்துக்கொண்டே கேட்டார்.



''ஆஹா! அந்த வரலாறு கூடத் தங்களுக்குத் தெரியுமா?'' என்று பரஞ்சோதி கூறியபோது அவனுடைய முகத்தில் மலர்ந்த புன்னகையில் நாணமும் கலந்திருந்தது.

''ஆமாம், தெரியும்! நீர் இங்கிருந்து போகும் வழியில் பிசாசுக்குப் பயந்த வீரர் வஜ்ரபாகுவைச் சிநேகம் செய்து கொண்டது முதல் எல்லாம் தெரியும் ......'' என்றதும், இரண்டு பேருமே கலகலவென்று நகைத்தார்கள்.

பிறகு, பரஞ்சோதி ''சக்கரவர்த்தி அடிக்கடி நள்ளிரவில் தனியாக உட்கார்ந்து ஓலைகள் எழுதுவதைப் பார்த்திருக்கிறேன். அந்த ஓலைகள் எல்லாம் தங்களுக்குத்தான் போலிருக்கிறது!'' என்றான்.

''ஆம், தளபதி! அப்படித்தான் இருக்க வேண்டும். சக்கரவர்த்தி எட்டு மாதத்துக்கு முன்பு இங்கிருந்து கிளம்பியபோது 'நானும் வருவேன்' என்று எவ்வளவோ பிடிவாதம் பிடித்தேன். சக்கரவர்த்தியும் பிடிவாதமாக

சக்கரவர்த்தி கூறி, முதலில் தாம் ரதத்தில் ஏறிக்கொண்டு, பரஞ்சோதியின் கரத்தைப் பிடித்துப் பலவந்தமாக ரதத்தில் ஏற்றித் தம் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார். சாரதி கண்ணபிரானும் முன் தட்டில் ஏறி உட்கார்ந்தான்.

"தளபதி! நேரே அரண்மனைக்குப் போகலாமா? உமது விருப்பம் என்ன?" என்று மாமல்லர் கேட்க, பரஞ்சோதி, "பிரபு! போகும் போதே நகரைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு போக விரும்புகிறேன். கொஞ்சங்கூடக் காலத்தை வீண் போக்குவதற்கில்லை" என்றான்.

"இந்த வீரர்களெல்லாம் நம்முடன் பின் தொடர்ந்து வர வேண்டுமா?"

"வேண்டவே வேண்டாம்! இவர்கள் எல்லாம் போய்விட்டால் தான் நாம் நிம்மதியாய் நகரைப் பார்த்துக் கொண்டு போகலாம்."

குமார சக்கரவர்த்தி கட்டளையிட, அங்கிருந்த வீரர்கள், பரஞ்சோதியுடன் வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு முன்னால் விரைந்து சென்றார்கள்.

கோட்டை வாசலின் கதவுகள் பழையபடி சாத்தப்பட்டது.

சாரதி கண்ணபிரான் குதிரைகளின் தலைக்கயிற்றை லாகவமாக ஒரு குலுக் குலுக்கியதும், ரதமும் அங்கிருந்து நகர்ந்தது.

பின்னர், பழையபடி அந்த வடக்குக் கோட்டை வாசலில் நிசப்தம் குடிகொண்டது.

இரண்டாம் அத்தியாயம்

பழைய நண்பர்கள்

ரதம் உள் கோட்டை வாசலைக் கடந்து காஞ்சிமா நகரின் அழகிய விசாலமான வீதிகளில் போகத் தொடங்கியபோது, பரஞ்சோதிக்குப் பழைய நினைவு வந்தது. எட்டு மாதங்களுக்கு முன்னால் ஒருநாள் இதே அந்தி நேரத்தில், இதே விதமாகப் பூரண சந்திரன் கீழ் வானத்தில் உதயமாகிக் கொண்டிருந்த சமயத்தில், தான் தெற்குக் கோட்டை வாசல் வழியாகக் காஞ்சி நகருக்குள் பிரவேசித்ததும், அன்றிரவு நிகழ்ந்த சம்பவங்களும் அவன் உள்ளத்தில் விரைவாகத் தோன்றின. அன்று அவன் காஞ்சியில் பிரவேசித்ததற்கும் இன்று பிரவேசித்ததற்கும் எவ்வளவு வித்தியாசம்! அன்றைக்கு ஒரு புத்த சந்நியாசியின் உதவியினால் கோட்டைக் கதவின் உள் துவாரத்தின் வழியாகத் திருடனைப்போல் புகுந்தவனை, இன்று கோட்டை வாசல் கதவுகள் விசாலமாகத் திறந்து கோட்டைத் தளபதியாக வரவேற்றிருக்கின்றன. அன்றிரவு நகர்க் காவலர்கள் இருவர் அவனைப் பிடித்துக்கொண்டு போய்ச் சக்கரவர்த்தியின் சிறைக்குள் விருந்தாளியாகச் செய்தார்கள். இன்றைக்கோ, குமார சக்கரவர்த்தியே இவனை வந்து வரவேற்றுத் தம்முடன் ரதத்தில் சரியாசனத்தில் அமர்த்தி அழைத்துச் செல்கிறார்!

"தளபதி! என்ன ஒரே யடியாக மௌனத்தில் ஆழ்ந்து விட்டீர்?" என்று மாமல்லர் கேட்டதும், பரஞ்சோதி சிந்தனை உலகிலிருந்து வெளி உலகத்துக்கு வந்தான்.

"மன்னிக்க வேண்டும், பிரபு! தங்களுடைய அன்பானது அப்படி என்னை மெய் மறக்கச் செய்து விட்டது. தென்னாட்டிலுள்ள மல்லர்களையெல்லாம் வென்று மகா மல்லர் என்று பட்டம் பெற்ற பல்லவ குமாரரின் பக்கத்தில் சமமாக உட்கார்ந்து போவது பரஞ்சோதிதானா என்று எனக்கே சந்தேகமாயிருக்கிறது."

"தப்பு, தளபதி! தப்பு! ராட்சஸப் புலிகேசியின் சேனா சமுத்திரத்தை மந்தரகிரியைப் போல் கடைந்து கலக்கிய மகா வீரரல்லவா நீர்? — வாதாபி யானைப் படையாகிய மேகத் திரளைச் சிதற அடித்த பெரும் புயற் காற்று அல்லவா நீர்?......"

"ஆஹா! பல்லவக் குதிரைப் படையின் சாகஸச் செயல்களின் புகழ்

இரண்டு வாசல்களுக்கும் நடுவில் கீழே கருங்கல் தளவரிசை அமைந்திருந்த வட்ட வடிவமான முற்றத்தில் வேல் பிடித்த வீரர்கள் பலர் அணிவகுத்து நின்றார்கள். இடையிடையே சில வீரர்கள் சுடர்விட்டெரிந்த தீவர்த்திகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு நடுவில், இரட்டைக் குதிரை பூட்டிய அலங்கார ரதம் ஒன்று காணப்பட்டது. ரதத்திற்குச் சமீபமாகப் பல வீரர்கள் சேர்ந்து பிடித்துக்கொண்டு நின்ற ரிஷபக் கொடியானது வானளாவிப் பறந்தது. திறந்த கோட்டை வாசல் வழியாகக் குபு குபு வென்று புகுந்து அடித்த வாடைக் காற்றில் அந்தக் கொடி சடசட வென்று சப்தித்துக் கொண்டு ஆடியதானது, புதிய கோட்டைத் தளபதிக்கு உற்சாகமாக வரவேற்புக் கூறுவது போலிருந்தது.

ரதத்தில் குமார சக்கரவர்த்தி மாமல்ல நரசிம்மர் வீற்றிருந்தார். ரதசாரதி கண்ணபிரான் குதிரைகளின் கடிவாளங்களை இழுத்துப் பிடித்துக்கொண்டு கீழே நின்றான்.

கதவு திறந்து தளபதி பரஞ்சோதி உள்ளே பிரவேசித்தாரோ இல்லையோ, மாமல்ல நரசிம்மர் ரதத்திலிருந்து கீழே குதித்தார். அவர் கையினால் ஒரு சமிக்ஞை செய்யவும், அருகில் நின்ற வீரர்களில் ஒருவன், இடி முழக்கம் போன்ற குரலில் "சளுக்கப் புலிகேசியின் அரக்கப் படைகளைக் கதிகலங்க அடித்த அலகாய சூரர், வீராதி வீரர், தளபதி பரஞ்சோதியார் வருக! வருக!" என்று கூவினான்.

அவனுடைய குரலின் பிரதித்வனியே போல், "தளபதி பரஞ்சோதியார் வருக! வருக!" என்று நூற்றுக் கணக்கான வீரக் குரல்கள் கோஷித்தன.

அந்த கோஷத்துடன் கலந்து, சங்குகளும் கொம்புகளும் தாரைகளும் தப்பட்டைகளும் முரசங்களும் பேரிகைகளும் ஏககாலத்தில் முழங்க, அந்தப் பெருமுழக்கமானது கோட்டை வாசலிலே எதிரொலியை உண்டாக்க, இந்தப் பலவகைச் சத்தங்களும் சேர்ந்து மயிர்க்கூச்சு உண்டாகும்படியான உற்சாக வெறியை உண்டாக்கின.

இத்தகைய வரவேற்பைப் பரஞ்சோதி சற்றும் எதிர்பார்க்கவில்லையென்பது அவன் முக பாவத்திலிருந்து நன்கு தெரிந்தது. குதிரை மேலேயே சற்று நேரம் திகைத்து நின்ற பிறகு, பரஞ்சோதி சட்டென்று குதிரை மீதிருந்து தரையில் குதித்து, ரதத்தின் அருகில் குமார சக்கரவர்த்தி நின்ற இடத்தை அணுகினான்.

தரையிலே மண்டியிட்டுப் பக்தியுடன் குமார சக்கரவர்த்திக்கு வணக்கம் செலுத்த விரும்பிய பரஞ்சோதியை மாமல்ல நரசிம்மர் தடுத்து இரு கரங்களாலும் அணைத்துத் தழுவிக் கொண்டார்.

சற்று நேரம் வரையில் இருவராலும் ஒன்றுமே பேச முடியவில்லை.

முதலில் குமார சக்கரவர்த்திதான் பேசினார்:—

"தளபதி! நாளெல்லாம் நிற்காமல் பிரயாணம் செய்து வந்தீர் போலிருக்கிறது. களைப்புக் காரணமாக உம்மால் பேசவே முடியவில்லை..."

"பிரபு! நான் பேச முடியாமலிருப்பதற்குக் காரணம் களைப்பு அல்ல. தங்களுடைய அன்புதான் காரணம். அரண்மனைக்கு வந்து தங்களைப் பார்த்து ஆக்ஞையைத் தெரிந்து கொள்ள எண்ணியிருந்தேன். கோட்டை வாசலுக்கு வந்து என்னை எதிர்கொள்வீர்களென்று நினைக்கவில்லை..."

"மகா வீரரே! கோட்டைக்கு வெளியிலே கிளம்பக் கூடாதென்று மட்டும் சக்கரவர்த்தி எனக்குக் கட்டளையிடாமலிருந்தால், சாலையில் வெகு தூரத்துக்கப்பால் உம்மை எதிர்கொள்வதற்கு வந்திருப்பேன். சென்ற எட்டுமாத காலமாக உம்மைப் பார்க்க வேணுமென்ற ஆவல் என் உள்ளத்திலே எப்படிப் பொங்கிக்கொண்டிருந்தது என்பது உமக்கு என்ன தெரியும்?...ரதத்தில் ஏறுங்கள்; எல்லாம் சாவகாசமாகப் பேசிக் கொள்வோம்!..." என்று குமார

புழுதிப் படலமும், குதிரைகள் வரும் சத்தமும் அதி விரைவில் நெருங்கி வந்து விட்டன.

மங்கலான மாலை வெளிச்சத்தில் குதிரைகளும் கண்ணுக்குப் புலனாயின. ஏறக் குறைய முப்பது குதிரைகள் இருக்கும்.

முன்னால் வந்த இரண்டு குதிரைகளின் மேலிருந்த வீரர்கள் கையில் ரிஷபக் கொடி பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக் கடுத்தாற் போல் தனித்து வந்த உயர்ந்த சாதிக் குதிரையின் மீது போர்க் கோலம் பூண்ட கம்பீரத் தோற்றமுடைய ஒரு யௌவன புருஷன் வீற்றிருந்தான். மற்றக் குதிரைகள் எல்லாம் கொஞ்சம் தள்ளிப் பின்னால் வந்தன.

கோட்டை வாசலுக்குச் சற்று அப்பால், அகழிப் பாலத்தின் அக்கரையில், எல்லாக் குதிரைகளும் நின்றன.

முன்னால் கொடி பிடித்துவந்த இருவரில் ஒருவன், "காஞ்சிமா நகர்க் கோட்டைத் தளபதி வீர பரஞ்சோதி வருகிறார்! கோட்டைக் கதவைத் திறவுங்கள்!" என்று கூவினான்.

"தளபதி பரஞ்சோதி வாழ்க! வாழ்க!" என்று முப்பது குரல்கள் கோஷித்தன.

கோட்டைக் காவலர் இருவரும் விரைவாக முன்னால் வந்தார்கள். தனித்த குதிரை மீதிருந்த வீரனை அணுகி வணக்கத்துடன் நின்றார்கள்.

ஆம்; அந்தக் கம்பீரமான கருத்த குதிரை மீது வீற்றிருந்த வீரன் வேறு யாருமில்லை; நமது பழைய நண்பனான பரஞ்சோதிதான்.

எட்டு மாத காலத்திற்குள்ளே அவனிடம் காணப்பட்ட மாறுதலானது மிக்க அதிசயமாயிருந்தது.

காஞ்சியில் பிரவேசிக்கும்போது அவன் உலகமறியாத பாலகனாயிருந்தான். அவனுடைய முகமானது பால் வடியும் குழந்தை முகமாயிருந்தது.

இப்போதோ அந்த முகத்தில், எத்தனையோ போர் முனைகளில் முன்னணியில் நின்று போரிட்டதின் அடையாளங்களான பல காயங்களுடன், உலக அநுபவ முதிர்ச்சியும் காணப்பட்டது.

எட்டு மாதத்திற்குள் பரஞ்சோதி எட்டு வயது அதிகமாகி, பால பருவத்தைக் கடந்து வீர யௌவனத்தை அடைந்திருந்தான்.

கோட்டைக் காவலர்கள் அவனை அணுகிப் பயபக்தியுடன் நின்றபோது, அவன் மிக்க பெருமிதத்துடனே கையில் ஆயத்தமாய் வைத்திருந்த சிங்க இலச்சினையை எடுத்துக் காட்டினான்.

அதைப் பார்த்த வீரர்கள் மறுபடியும் தளபதி பரஞ்சோதிக்கு வணக்கம் செலுத்தி விட்டுத் திரும்பிச் சென்று, அகழியின் பாலத்தை நெருங்கியதும், தங்கள் தோளில் தொங்கிய கொம்பை எடுத்து ஊதினார்கள்.

உடனே, கோட்டைக் கதவிற்குள் அமைக்கப் பட்டிருந்த ஒரு சிறிய துவாரக் கதவு திறந்தது. உள்ளிருந்து ஒரு முகம் எட்டிப் பார்த்தது. வாசற் காவலர்களை அந்த முகம் ஏதோ கேட்க, அவர்கள் மறுமொழி சொன்னார்கள்.

முகம் உள்ளே போயிற்று. துவாரம் அடைபட்டது.

அடுத்த கணம் உட்புறத்தில் இரும்புத் தாள்களும் பூட்டுக்களும் திறக்கப்படும் சத்தம் கேட்டது. பின்னர், அந்த பிரம்மாண்டமான கோட்டைக் கதவுகள், கடகட வென்றும் படபட வென்றும் சத்தம் செய்துகொண்டு திறந்தன.

கொடி பிடித்த இரு வீரர்களையும் பின்னால் விட்டு விட்டு, தளபதி பரஞ்சோதி அகழியின் பாலத்தைக் கடந்து கோட்டை வாசலுக்குள் பிரவேசித்தான். பிரவேசித்ததும், உள்ளே அவன் கண்ட காட்சி அவனுக்கு மிக்க வியப்பளித்திருக்க வேண்டுமென்று அவன் முகத்தோற்றம் தெரியப்படுத்தியது.

முன் கோட்டை வாசலுக்கு ஏறக் குறைய இருநூறு அடி தூரத்தில், இரண்டாவது சிறு வாசல் ஒன்று காணப்பட்டது.

சிவகாமியின் சபதம்

கல்கி

இரண்டாம் பாகம்: காஞ்சி முற்றுகை

முதல் அத்தியாயம்

வடக்கு வாசல்

கார் காலத்தில் ஒரு நாள் மாலை காஞ்சிமா நகரின் கோட்டை கொத்தளங்களுக்குப் பின்னால் சூரியன் இறங்க, வட கிழக்குத் திசையில் குமுறிக் கொண்டிருந்த மேகங்களின் தங்க விளிம்புகள் வர வர ஒளி குன்றி வந்தன. செங்கதிர்த் தேவன் தன் கடைசித் தங்கக் கிரணத்தையும் சுருக்கிக் கொண்டு மறையவே, வான முகில்கள் நீல நிறத்தை அடைந்து, திருமாலின் மேனி வண்ணத்தை நினைவூட்டின.

வட கிழக்குத் திசையிலிருந்து விர்ரென்று அடித்துக் கொண்டிருந்த வாடைக் காற்று தேகத்தில் பட்ட போது சிலுசிலுப்பு உண்டாயிற்று.

காஞ்சிமா நகரத்துக் கோட்டை மதில்களிலும் கோயில் கோபுரங்களிலும், அரண்மனை விமானங்களிலும், கலை மண்டபங்களிலும் குடியேறி வாழ்ந்த பல வகைப் பறவைகள் சட சட வென்று இறக்கைகளை அடித்துக்கொண்டு தத்தம் வாசஸ்தலத்தை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன.

அந்த மனோரம்மியமான அந்திப் பொழுதில் காஞ்சிக் கோட்டையின் விசாலமான வடக்கு வாசல் அமைதி குடிகொண்டு விளங்கிற்று.

எட்டு மாதத்துக்கு முன்னால் மகேந்திர சக்கரவர்த்தி அந்தக் கோட்டை வாசல் வழியாகப் போர்க் களத்துக்குப் பிரயாணமான பின்னர், அவ்வாசலின் பிரம்மாண்டமான கதவுகள் திறக்கப் படவே இல்லை.

கோட்டையின் உட்புறத்தில் கனமான எஃகுச் சட்டங்களினால் கதவுகளைத் தாளிட்டுப் பெரிய பூட்டுக்களினால் பூட்டப்பட்டிருந்தது.


வாசலின் வெளிப்புறத்தில் காவலர்கள் இருவர் கையில் வேலுடனும் இடையில் வாளுடனும் நின்று காவல் புரிந்தார்கள். ஒவ்வொருவருடைய கழுத்திலும் ஊதும் கொம்பு ஒன்று தொங்கியது. கோட்டை வாசலிலிருந்து புறப்பட்ட விசாலமான இராஜ பாட்டையானது அங்கிருந்து வெகு தூரம் வரையில் வளைந்தும் நெளிந்தும் ஊர்ந்து செல்லும் பாம்பைப்போல் காணப்பட்டது.

அந்தப் பாதையில் கண்ணுக் கெட்டிய தூரத்துக்கு ஒருவரும் காணப்படவில்லையாயினும், காவலர்கள் இருவரும் சாலையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பதைப்பார்த்தால், யாரையோ அவர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருந்ததுபோல் தோன்றியது.

திடீரென்று வெகு தூரத்தில் புகைப் படலம் போன்ற புழுதி எழுந்தது. குதிரைகளின் பாய்ச்சல் சத்தம் கேட்டது. காவலர்கள் இருவரும் ஜாக்கிரதையாக நின்றார்கள்.


கோட்டை வாசலின் மேல் மாடத்தில் எச்சரிக்கை முரசு 'திண்' 'திண்' என்று சப்தித்தது.

மூன்று சாம்ராஜ்யங்கள்



"சிவகாமியின் சபதம்" நிகழ்ந்த காலத்தில் பாரத நாட்டின் அரசியல் நிலைமை.

துக்கப்பட வேண்டும்? பீஷ்மரும் கிருபரும் ஜயத்ரதனும் சோமதத்தனும் நானும் உனக்குத் துணையாக இருக்க, நீ பூமி முழுதுமே ஜயிக்கலாம். வருந்தப்படாதே" என்றான்.




இதைக் கேட்ட துரியோதனன், "சகுனியே, இவ்வளவு துணைவர்கள் இருப்பாராயின், யுத்தம் செய்து இந்திரப்பிரஸ்தத்திலிருந்து பாண்டவர்களை நாம் துரத்த வேண்டும்" என்றான்.

"வேண்டாம். அது அபாயகரமான வேலை. யுத்தமின்றி எந்த உபாயத்தினால் யுதிஷ்டிரனை எளிதில் வெல்லலாமோ அது எனக்குத் தெரியும்" என்றான் சகுனி.

துரியோதனன் கண்களில் பிரகாசம் தோன்றிற்று. "மாமா! யாருடைய உயிரும் சேதப்படாமல் பாண்டவர்களை ஜயிக்க முடியுமா? அதற்கு ஏதாவது வழியுண்டா?" என்று மிக்க ஆவலோடு துரியோதனன் சகுனியைக் கேட்டான்.

"துரியோதனா! யுதிஷ்டிரன் பந்தய ஆட்டத்தில் ஆசையுள்ளவன். அவனுக்கு ஆடத் தெரியாது. நாம் அழைத்தால் க்ஷத்திரிய குலாசாரத்தின்படி அவன் கட்டாயம் ஒப்புக்கொள்ளுவான். நான் ஆட்டத்தில் தேர்ந்தவன். உனக்காக ஆடுவேன். ஆட்டத்தில் அவனுடைய ராஜ்யத்தையும், ஐஸ்வர்யத்தையும் உனக்காக நான் அவனிடமிருந்து பறித்துவிட முடியும்" என்றான்.

பறவையின் தவறு!



சிவகாமியின் சபதம்

முதற் பாகக் கதை

இன்றைக்கு ஆயிரத்து முந்நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னால் கல்வியிற் சிறந்த காஞ்சிமா நகரில் தர்ம மகா ராஜாதி ராஜ மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி செங்கோல் செலுத்தி வந்தார். அவருடைய சாம்ராஜ்யம் தெற்கே பாண்டிய நாட்டு எல்லையிலிருந்து வடக்கே கோதாவரி நதிக்கரை வரையில் பரவியிருந்தது.

கீழைச் சோழ நாட்டிலுள்ள திருச்செங்காட்டாங்குடி என்னும் கிராமத்திலிருந்து பரஞ்சோதி என்னும் இளைஞன் காஞ்சியில் திருநாவுக்கரசர் மடத்தில் சேர்ந்து தமிழ்க் கல்வி கற்பதற்காக வந்தான். வழியிலே சந்தித்த நாகநந்தி என்னும் புத்த சந்நியாசியுடன் அவன் ஒரு நாள் இருட்டிய பின்னர் காஞ்சிக் கோட்டைக்குள் பிரவேசித்தான். அதே தினத்தில், சளுக்க மன்னனாகிய புலிகேசி பல்லவ சாம்ராஜ்யத்தின்மேல் படையெடுத்திருக்கும் செய்தி வந்ததின் காரணமாக, ஆயனச் சிற்பியின் பெண் சிவகாமியின் நடன அரங்கேற்றம் நடுவில் தடைப்பட்டது.

நெறி கெட்டு ஓடி வந்த மத யானையின்மேல் வேலை எறிந்து ஆயனரையும் சிவகாமியையும் பரஞ்சோதி தப்புவித்துவிட்டு, தான் தப்புவதற்காக ஓடுகிறான். அவனை ஒற்றன் என்று சந்தேகித்துக் காவலர்கள் சிறையில் அடைக்கிறார்கள். அன்றிரவே நாகநந்தி அவனைச் சிறையிலிருந்து தப்புவித்து இரகசிய வழியின் மூலம் கோட்டைக்கு வெளியே அழைத்துச் செல்கிறார்.

திருநாவுக்கரசருக்கும் ஆயனருக்கும் பரஞ்சோதி ஓலை கொண்டு வந்திருந்தான். திருநாவுக்கரசர் காஞ்சியில் இல்லை என்று அறிந்து, அவன் புத்த பிக்ஷுவுடன் ஆயனர் வீடு செல்கிறான்.

ஆயிரம் வருஷம் ஆனாலும் அழியாத அஜந்தா வர்ணச் சேர்க்கை இரகசியத்தை அறிந்து வருவதற்காகப் பரஞ்சோதியைக் கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள நாகார்ஜுன மலைக்கு ஆயனரும் நாகநந்தியும் அனுப்புகிறார்கள்.

மகேந்திர சக்கரவர்த்தி, சிவகாமியிடம் காதல் கொண்ட குமார சக்கரவர்த்தி நரசிம்ம வர்மரைக் காஞ்சிக் கோட்டையை விட்டு வெளியில் போகக்கூடாதென்று திட்டம் செய்து விட்டு, வடக்கே போர்க்களம் செல்கிறார்.

காஞ்சியில் திருநாவுக்கரசர் மடத்துக்கு ஒரு நாள் ஆயனரும் சிவகாமியும் வருகிறார்கள். நாவுக்கரசரின் திருப் பாசுரங்களுக்குச் சிவகாமி அபிநயம் பிடித்து உணர்ச்சி மிகுதியினால் மூர்ச்சை யடைகிறாள்.

அச்சமயம் அங்கிருந்த நரசிம்ம வர்மரின் நடவடிக்கைகளிலிருந்து அவர் சிவகாமியிடம் கொண்டிருந்த காதலை அவருடைய ரதசாரதி கண்ணபிரான் தெரிந்து கொள்கிறான். அதைப் பற்றி அவன் தன் மனைவி கமலியிடம் அன்றிரவு பேசிக் கொண்டிருந்ததைச் சிவகாமி ஒட்டுக் கேட்க நேருகிறது.

ஓலையுடன் சென்ற பரஞ்சோதிக்கு வழியில் வஜ்ரபாகு என்னும் வீரன் பழக்கமாகிறான். மகேந்திர மண்டபத்தில் அவர்கள் இரவு தூங்கினபோது பரஞ்சோதியின் ஓலை மாற்றப்படுகிறது. மறு நாள் அவனைப் புலிகேசியின் ஆட்கள் வாதாபி சைன்யத்தின் பாசறைக்குப் பிடித்துச் செல்கிறார்கள். ஓலையின் கருத்து விளங்காமல் புலிகேசி பரஞ்சோதியைக் காவலுடன் ஸ்ரீ பர்வதத்துக்கு அனுப்புகிறான்.

வழியில் வஜ்ரபாகு அவனைச் சளுக்க வீரர்களிட மிருந்து தப்புவித்துப் பல்லவ சைன்யத்தின் பாசறைக்குக் கொண்டு வந்து சேர்க்கிறான்.

வியாசர் விருந்து

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

சகுனியின் பிரவேசம்

இந்திரப் பிரஸ்த நகரத்தில் பாண்டவர்கள் நடத்திய ராஜசூய யாகம் முடிந்த பின் வந்திருந்த அரசர்களும் மற்றப் பெரியோர்களும் விடைபெற்றுக் கொண்டு திரும்பும்போது வியாசரும் அரசனிடம் சொல்லிப் போக வந்தார். தருமபுத்திரன் எழுந்து முனிவருக்கு ஆசனம் அளித்துப் பூஜித்துப் பக்கத்தில் உட்கார்ந்தான். "குந்தி புத்திரனே! பெறுதற்கரிய சாம்ராஜ்ய பதவியை அடைந்தாய். கௌரவகுலம் உன்னால் பெருமை அடைந்தது. நான் போவதற்கு விடை கொடுப்பாயாக" என்றார் முனிவர்.

குலத்திற்குப் பிதாமகரும் குருவுமான வியாசரின் காலைத் தொட்டு யுதிஷ்டிரன், "குருவே! என் சந்தேகத்தைத் தீர்க்கக் கூடியவர் நீங்கள்தான். மிகவும் கொடிய உற்பாதங்களைக் கண்டதாகப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அவற்றின் பயன் சிசுபாலனுடைய மரணத்தினால் தீர்ந்து போயிற்றா அல்லது இன்னும் கவலைக்கிடமுண்டா?" என்று கேட்டான்.

தருமபுத்திரனுடைய கேள்விக்கு வியாச பகவான் சொன்னார்:

"அப்பனே! பதின்மூன்று வருஷ காலம் கஷ்டங்கள் நேரும். க்ஷத்திரிய குலம் அழியப் போவதைக் காட்ட இந்த உற்பாதங்கள் தோன்றின. சிசுபாலனுடைய வதத்தோடு இது முடியவில்லை. இன்னும் பெரிய சம்பவங்களும் நடக்க வேண்டியிருக்கிறது. அரசர்கள் நூற்றுக்கணக்காக மாள்வார்கள். அந்த நாசத்திற்கு நீ காரணமாவாய். உன் பங்காளிகளுடன் நீயும் உன் சகோதரர்களும் பகைமை கொண்டு க்ஷத்திரிய வம்சத்திற்கே நாசம் தரும்படியான மகா யுத்தம் உண்டாகும். காலத்தின் பயனாக வரும் விதியை விலக்க முடியாது. மனங் கலங்காமல் தைரியமாக இருப்பாயாக. நான் போய் வருகிறேன். ஐம்புலன்களை அடக்கி நிலை திரியாமல் ஜாக்கிரதையாக இருந்து கொண்டு ராஜ்ய பாலனம் செய்வாயாக" என்று ஆசீர்வதித்தார்.



அர்ச்சுனன்

வியாசர் சென்ற பிறகு, கவலைக் கடலில் மூழ்கிய யுதிஷ்டிரன் தன் சகோதரர்களிடம் விஷயத்தைச் சொல்லி, "வீரர்களே! வியாசர் சொன்ன சொல்லைக் கேட்டுத் திகில் அடைந்தேன். எனக்கு வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகி விட்டது. அரசர்களுடைய அழிவிற்கு நான் காரணமாவேன் என்று அறிந்த பின் நான் உயிர் வைத்துக் கொண்டிருப்பதில் என்ன பயன்?" என்றான்.

இதைக் கேட்ட சகோதரர்களில் அருச்சுனன் பேசினான்.

"அரசனாகிய நீர் இவ்வாறு மனதைக் கலவரப்படுத்திக் கொள்ளக் கூடாது. விஷயங்களை ஆராய்ந்து அந்தந்தச் சமயத்தில் எது கடமையோ அதைச் செய்ய வேண்டும்" என்றான்.

யுதிஷ்டிரன், "சகோதரர்களே, ஈசுவரன் நம்மைக் காப்பாராக. கலகமுண்டாகாமலிருப்பதற்காக நான் பிரதிக்ஞை செய்கிறேன். இன்றுமுதல் பதின்மூன்று வருஷ காலம் நான் என் சகோதரர்களையாவது மற்

க்குத் தகுதியாக அன்று மிருதங்கம் வாசித்த ராமநாதபுரம் ஈசுவரனைப் பெரிதும் பாராட்டுகிறேன். மிருதங்க வாத்தியத்தில் ஈசுவரனுடைய திறமை அன்றுதான் பரிபூரணமாக வெளியாயிற்று.

"மழவராய சேர்தல்" என்று சில தடவை சொல்லிப் பாருங்கள். நமது அமுதத் தமிழ்மொழி எவ்வளவு அழகும் இனிமையும் பொருந்தியது என்று தெரியவரும். அன்று பாகவதர் தம்முடைய மூதாதையான சிதம்பர பாரதியின் அழகிய தமிழ் ஸாஹித்யங்கள் சிலவற்றையும் சிறப்பாகப் பாடினார்.

மழவராய சேர்தல் பாகவதரிடமுள்ள கலைச் செல்வத்தைப் புதிய இளம் வித்வான்கள் சிரத்தையுடன் பெற்றுக்கொண்டால், தாங்களும் நன்மை யடையலாம்; சங்கீத ரஸிகர்களையும் களிப்பிக்கலாம்.

கேளுங்கள்!

ஒரு நல்ல செய்தியைக் கேளுங்கள். அக்டோபர் 2உ நெருங்கிக் கொண்டிருக்கிறது. அன்று மகாத்மாவின் 75-வது பிறந்த தினம். அன்றைய தினம் அன்னை கஸ்தூரிபாயின் ஞாபகார்த்தமாக மகாத்மா காந்தியிடம் எழுபத்தைந்து லட்சம் ரூபாய் சமர்ப்பிப்பதென்று தேசத் தலைவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். மேற்படி புனித நிதிக்கு நீங்கள் உங்களுடைய நன்கொடையை அளித்தாகி விட்டதா? நல்லது. இன்னும் கொடுக்கவில்லையா? ரொம்ப நல்லது. இதுவரை கொடுக்காதவர்கள் இப்போது கொடுப்பதற்கும், கொடுத்தவர்கள் மறுபடியும் கொடுப்பதற்கும் ஒரு நல்ல சந்தர்ப்பம் நாளது ஜூலை 30உ ஞாயிற்றுக்கிழமை வருகிறது.

அன்று மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூல் ஹாலில், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் சங்கீதக் கச்சேரி நடக்கிறது. இந்தக் கச்சேரியில் கிடைக்கும் தொகை முழுதும் அன்னை கஸ்தூரி பா நிதிக்குச் சேர்கிறது. நாலு மணி நேரம் அமுத கீதத்தையும் கேட்டுவிட்டு, ஒரு பெரிய புனித கைங்கரியத்துக்கும் பணங் கொடுத்து விட்டு வருவதென்றால், அது எப்பேர்ப்பட்ட பாக்கியம்?

பணம், அவரவர்களுடைய சக்திக்குத் தகுந்தபடி கொடுக்கலாம். இரண்டு ரூபாய் முதல் நூறு ரூபாய் வரையில் டிக்கெட் இருக்கிறது. மனது மட்டுந்தான் வேண்டும்; அத்தோடு முன்னதாக டிக்கெட் வாங்குவதற்குக் கொஞ்சம் சுறுசுறுப்பும் வேண்டும்.



ஆடல் பாடல்



"கர்நாடகம்"

கேட்கக் கூடிய பாட்டு இருக்கிறது: கேட்க முடியாத பாட்டும் இருக்கிறது.

ஆனால், பார்க்கக்கூடிய பாட்டு உண்டா?

அடையாறு கலாக்ஷேத்திரத்தில் மழவராய சேந்தல் சுப்பராம பாகவதரின் கச்சேரியைக் கேட்ட பிறகு, "பார்க்கக்கூடிய பாட்டும் உண்டு" என்று எனக்குத் தெரிய வந்தது.

மழவராய சேந்தல் சுப்பராம பாகவதரின் பாட்டை, "பார்க்கக்கூடிய பாட்டு" என்று நான் சொல்லும்போது, அந்த வயோதிக வித்வானுடைய முகத் தோற்றத்தையோ வைரக் கடுக்கனையோ குறிப்பிடவில்லை. அவருடைய பாட்டின் பாணியைத்தான் சொல்கிறேன்.

தள்ளாமை காரணமாக வித்வான் பாடும்போது சில சமயம் நெஞ்சை அமுக்கிக் கொள்கிறார்; நெற்றியைப் பிடித்துக் கொள்கிறார். 'அம்மா!' 'அப்பா!' என்கிறார்.

ஆனால், என்ன அதிசயத்தைச் சொல்ல? பாட ஆரம்பித்து விட்டால், எங்கிருந்தோ ஜீவ சக்தியும் நவ யௌவனமும் குரலில் வந்து விடுகின்றன.

ஒரு ராகத்தை அவர் ஆலாபனம் செய்யும்போது, சுவரில் எழுதும் சித்திரம்போல் அந்த ராகமானது நம் கண் முன்னால் பார்க்கக்கூடிய ஓர் உருவத்தை எடுக்கின்றது. அந்த உருவம் அப்படியே நம்முடைய மனதில் பதிந்து அழியாத இசைச் சித்திரமாகி விடுகிறது.



அன்று பாகவதர் பாடிய ஸாலக பைரவி, கல்யாணி, காம்போதி ஆகிய ராகங்கள் இப்போது நினைத்தாலும் என்னுடைய மனக்கண் முன்னால் தனித்தனியான அபூர்வ உருவத்துடன் காட்சி தருகின்றன.

நிரவலைப் பற்றிச் சமீபத்தில் பிரஸ்தாபம் நடந்ததல்லவா? "நிரவல் சன்னாய்ச் செய்யக்கூடிய வித்வான்கள் எல்லாரும் ஏற்கெனவே செத்துப் போய்விட்டார்கள்!" என்று யாரோ சொன்னார்கள் அல்லவா?

"இதோ மழவராய சேந்தல் பாகவதர் ஒருவர் நிச்சயமாய் ஜீவியவந்தராயிருக்கிறார்; நிரவல் செய்யத் தெரியாதவர்கள் அவரிடம் போய்த் தெரிந்து கொள்ளலாம்!" என்று நான் சொல்லுகிறேன். "நிதி(த்)சால சுகமா?" கீர்த்தனத்தில் "தம ஸம மனு கங்கா ஸ்நானமு சுகமா?" என்ற இடத்தில் பாகவதர் செய்த நிரவலைக் கேட்ட ரசிகர்கள் அதை மறக்கவே முடியாது.

ராக ஆலாபனத்திலும், ஸ்வரத்திலும் பாகவதருடைய பாணியில் எவ்வளவு அழுத்தத்தைக் காண்கிறோமோ அவ்வளவு அழுத்தத்தை அவர் ஸாஹித்யத்தை உச்சரிக்கும் முறையிலும் காண்கிறோம். கை விரலை அழுத்தமாகச் சுட்டி லாகவமாய் ஆட்டிக் கொண்டு அவர் ஸாஹித்யத்தை எழுத்து எழுத்தாக விளங்கும்படி அழுத்திச் சொல்லும்போது, "இந்த வார்த்தை உங்கள் மனதில் பதிகிறதா? பதியாவிட்டால் ஏன் பதிய வில்லை என்பதற்குத் தக்க முகாந்திரம் சொல்லவும்!" என்று நம்மைக் கேட்பது போலிருக்கிறது.

பாகவதருடைய லயத் திறமையைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. மற்றவர்களைப்போல் தொடையில் கையால் தாளம் போட்டுக் கொண்டோ, விரல் விட்டு எண்ணிக் கொண்டோ அவர் பாடுவதில்லை. தொடையினால் தரையில் தாளம் போட்டுக் கொண்டு பாடுகிறார். இடக்கு மடக்கான வேலைகளையும் வித்தைகளையும் செய்து கொண்டு சக்கைப் போடாக ஸ்வரக் கோவைகளை அள்ளி வீசுகிறார்.

பாகவதருடைய லயத் திறமை பொருந்திய பாட்

களில் உள்ள இந்தியாவின் உண்மை நண்பர்கள் கூட அறிந்து கொள்ள முடியவில்லை. காங்கிரஸின் கட்சியைத் திரித்துக் கூறி அயல் நாடுகளில் பிரசாரம் செய்வது நம் எதிரிகளுக்கு மிகவும் எளிதாயிருந்தது.

இனிமேல், அத்தகைய பொய்ப் பிரசாரம் செய்ய முடியாது.

சைனாவிலும் அமெரிக்காவிலும் உள்ள இந்தியாவின் நண்பர்கள் இந்தியக் கோரிக்கையைப் பலமாக ஆதரிக்கவும் பிரசாரம் செய்யவும் முடியும். எனவே, உலக அபிப்பிராயம் நம்முடைய சார்பில் அதிகமாகத் திரும்பும்.

அதனால் இப்போது, அதாவது யுத்தம் நடக்கும்போது, போதிய பலன் இல்லாவிட்டாலும், யுத்தம் முடிந்து சர்வதேசச் சமாதான மகாநாடுகள் கூடும்போது நிச்சயமாகப் பலன் ஏற்படும்.

அப்போது இந்தியாவின் நியாயமான கோரிக்கைகளைப் பொய்க் காரணங்களைச் சொல்லி நிராகரிப்பது சாத்தியமாகாது.

* * *

மகாத்மாவின் யோசனைகள் நமக்கு விசேஷமான திருப்தியை யளிப்பதற்கு முக்கிய காரணம் இருக்கிறது.

'' கல்கி '' ஆரம்பமாகி இரண்டாவது இதழிலேயே, காங்கிரஸின் அரசியல் போர் முறை மாறவேண்டியதன் அவசியத்தை நாம் வற்புறுத்தி யிருந்தோம்.

யுத்த காலத்தில் சட்டமறுப்புக் கூடாது என்றும், தேசத் தலைவர்கள் சிறைக்குப் போகாமல் வெளியிலேயே இருக்கவேண்டும் என்றும், '' அதிகாரத்தைக் கொடுத்தால் யுத்த முயற்சியில் ஒத்துழைக்கிறோம் '' என்ற பல்லவியையே ஓயாமல் பாடிக் கொண்டிருக்க வேண்டும் என்றும், முடிந்த வரையில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்றும், அப்படிச் செய்தால்தான் யுத்தத்தில் அவ்வப்போது ஏற்படும் நிலைமைகளை தேசத்துக்கு அனுகூலமாக உபயோகப் படுத்திக் கொள்ள சாத்தியமாகும் என்றும் சென்ற மூன்று வருஷமாக வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

அந்தக் கொள்கை இப்போது தேசத்தில் அமுலுக்கு வருவது நமக்கு மிகுந்த திருப்தியை அளிக்கிறது.

ஆகாச வெடி

'' இனிமேல் சிறைக் கைதிகளுக்கு அரைப்பவுண்டு ஐஸ் கொடுக்க வேண்டுமென்று சிந்து சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.''
—கராச்சி செய்தி.

இந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே சிறைக் கைதிகளின் உள்ளம் குளிர்ந்து போயிருக்குமென்று நம்புகிறோம்.

★

'' ஐக்கிய மாகாணத்தில் கோண்டா என்ற இடத்திலிருந்து ஒரு மைல் தூரமுள்ள கோரக்பூருக்கு ஒருவர் எழுதிய கடிதம் 22 மாதங்கள் கழித்துப்போய்ச் சேர்ந்தது. கடிதத்தில் உடனே பதில் எழுதவும் என்று குறிப்பிட்டிருந்தது.''
—ஒரு செய்தி.

விலாசதாரர் இந்தக் கடிதத்திற்கு உடனே பதில் எழுதி அதை மறுபடியும் தபாலில் அனுப்பி யிருக்க மாட்டார் என்று நம்புகிறோம்!

★

'' நேற்று சென்னைக் கடலில் நாலு சுறா மீன்கள் பிடிக்கப்பட்டன. மேற்படி சுறா மீன்கள் 'ஷார்க் லிவர்' எண்ணெய் வடிக்குமாம்.'' —ஒரு செய்தி.

இந்த மனிதர்களிடம் அகப்பட்டுக் கொண்டதற்காக மேற்படி சுறா மீன்கள் முதலில் கண்ணீர் வடிக்கும் என்பது மட்டும் நிச்சயம்!

★

'' எழும்பூரிலிருக்கும் கவர்ன்மெண்டு மியூஸியம் ஜனது 20உ வியாழக்கிழமை சூரிய கிரகணத்தை முன்னிட்டு மூடப்படும்.''
—ஒரு செய்தி.

இதற்காக, மியூஸியத்திலுள்ள செத்துப்போன பாம்பு வகையறாக்கள் தங்கள் மூதாதையர்களான ராகு — கேதுக்களை வாழ்த்தி யிருக்குமென்று நம்புகிறோம்.

★

'' காந்திஜி சம்மதம் பெற்ற ராஜாஜி திட்ட சம்பந்தமாகத் தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி கேட்டதற்கு, ஜின்னா 'இப்போது நான் ஒன்றும் சொல்வதற்கில்லை' என்று கூறினார்.''
—ஒரு செய்தி.

இப்போது மட்டுமென்ன? எப்பொழுதுமே அதற்கு விரோதமாக ஒன்றும் சொல்ல முடியாதுதான்.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான '' சிக்கனம் '' என்னும் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: வி. தியாகராஜன், சென்னை.

"அப்படியாவது அரசியல் சமரசம் இப்போது என்னத்திற்காக? அதற்கு அவசியம் என்ன?"

"அதுதான் உங்கள் சங்கடம் என்று எனக்குத் தெரியும். சொல்கிறேன் கேளுங்கள். யுத்தம் முடிந்ததும் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்கப் போவதாக நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். கட்டாயம் கொடுத்துத்தான் தீரவேண்டி வரப்போகிறது. இராணுவத்தைத் தவிர மற்ற இலாகாக்களை இந்தியர்களிடம் ஒப்படைக்கத் தயார் என்று இரண்டு வருஷத்துக்கு முன்னாலேயே கிரிப்ஸ் தூதின்போது சொல்லியிருக்கிறீர்கள். அதையெல்லாம் உண்மையாய்ச் சொல்லியிருக்கும் பட்சத்தில் மகாத்மா இப்போது கோருவதை ஒப்புக்கொள்வதில் உங்களுக்குத் தடையொன்றும் இருக்க முடியாது. அப்படி ஒப்புக்கொண்டால், 'ஜப்பானை ஜயிப்பதற்கு உங்கள் இராணுவ ஏற்பாடுகளுடன் நாற்பது கோடி மக்களின் உற்சாகமான ஒத்துழைப்பும் சேரும்: இது முதலாவது பெரிய அனுகூலம். பிரிட்டனுக்கு நாற்பது கோடி இந்திய மக்களின் நிரந்தர சிநேகம் கிடைக்கும்: இது இரண்டாவது பெரிய அனுகூலம். பஞ்ச நிவாரணம், உணவுப் பயிர்ப் பெருக்கம் முதலிய காரியங்களை இந்தியத் தலைவர்களிடம் விட்டுவிட்டு, நீங்கள் இராணுவ முயற்சிகளில் பூரணமாய் ஈடுபடலாம்; பஞ்சத்தில் ஜனங்கள் சாகும் பொறுப்பு உங்கள் தலையில் சாராது: இது மூன்றாவது பெரிய அனுகூலம்."

"வாஸ்தவந்தான்; வாஸ்தவந்தான். ஆனால் இதையெல்லாம் இப்போது சொல்லும் காந்தி முன்னமே ஏன் சொல்லவில்லை?"

"எப்படிச் சொல்லுவார்? ஆகஸ்டு தீர்மானத்திற்குப் பிறகு லின்லித்கோவை மகாத்மா பார்க்க விரும்பியது இதையெல்லாம் சொல்வதற்காகவே இருக்கலாம். அதற்கு இடங்கொடாமல் அவரை லின்லித்கோ சிறைக்கனுப்பி விட்டார். ஆகாகான் அரண்மனையில் தம்மை வந்து பார்க்கும்படி உங்களைக் கேட்டதும் அதற்காகவே இருக்கலாம். நீங்களும் போகவில்லை. எப்படி யாரிடம் சொல்லுவார்?"

"உண்மைதான்!" என்றார் வேவல்.

"அப்படியானால், உடனே போய்த் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வீர்கள் அல்லவா?"

"என்ன நடவடிக்கை?"

"முதலில், சிறையில் உள்ள காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும். அப்புறம், மகாத்மாவை அழைத்து மனங் கலந்து பேச வேண்டும். பின்னர், தேசிய மந்திரி சபை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்."

"சரி; சரி: அப்படியே ஆகட்டும்!" என்று சொல்லி வைஸ்ராய் வேவல் விரைவாகக் கிளம்பிச் சென்றார். வாசலில் 'விர்'ரென்று ஆகாச விமானச் சத்தம் கேட்டது.

* * *

கண்ணை விழித்துப் பார்த்தால், இத்தனை நேரமும் வைஸ்ராய் வேவல் உட்கார்ந்திருந்த இடத்தில் நாற்காலியைக் கூடக் காணோம். எல்லாம் பகற் கனவு என்று தெரிந்தது.

வேவலும் அமெரியும் சர்ச்சிலும் தங்களுக்கு வந்திருக்கும் அதிர்ஷ்டத்தை அவ்வளவு சுலபமாக உணர்ந்து விடுவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

ஏகாதிபத்திய வெறியும், யுத்தத்தில் ஜயிக்கிறோமென்னும் பெருமிதமும் அவர்களுடைய கண்களைத் தாற்காலிகமாகக் குருடாகச் செய்யக் கூடும்.

"பூஜை வேளையில் கரடியை விட்டதுபோல், இப்போது அரசியல் சமரசம் என்னத்திற்கு? தேசிய மந்திரி சபை என்னத்திற்கு? எல்லாம் இப்போது நடக்கிறபடியே நடக்கட்டும்" என்று அவர்கள் நினைக்கலாம்.

அரசியல் சமரசம் ஏற்படாமலிருப்பதற்கு இன்னும் புதிய புதிய காரணங்களை அவர்கள் கண்டு பிடித்துக் கொண்டிருக்கலாம்.

ஆனாலும், மகாத்மா இப்போது வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்களினால் இந்தியாவுக்கு மகத்தான அனுகூலம் உண்டு என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

எதிராளிகள் இணங்கி வந்தாலும் வராவிட்டாலும் நம்முடைய கட்சியில் குறை சொல்ல இடமில்லாமல் நேர் செய்து வைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

இப்போது மகாத்மா வெளியிட்டிருக்கும் யோசனைகளினால் காங்கிரஸின் கட்சி நேர்ப்படுகிறது.

சென்ற இரண்டு வருஷமாகக் காங்கிரஸின் போக்கை வெளி நாடு

யுத்தத்தில் சேரப்பண்ணியதும் பிரிட்டிஷாரின் அதிர்ஷ்டந்தானே?''

'' ஆமாம்!''

'' சில அதிர்ஷ்டங்கள் நம்மீது வந்து மோதுகின்றன. இன்னும் சில அதிர்ஷ்டங்களை நாம் எதிர்கொண்டு அழைக்க வேண்டும். இல்லாவிட்டால் அவை திரும்பிப் போய்விடும். அந்த மாதிரி பெரிய அதிர்ஷ்டம் ஒன்று உங்களுக்கு இப்போது வந்திருக்கிறது. கடவுளே பார்த்து உங்களுக்காக அனுப்பியிருக்கிறார்!''

'' அது என்ன அதிர்ஷ்டம்?''

'' பார்த்தீர்களா? உங்களைத் தேடி வந்திருக்கும் அதிர்ஷ்டத்தை நீங்களே தெரிந்து கொள்ளவில்லை? இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள். உங்களைத் தேடி வந்த அதிர்ஷ்டமானது மலேரியாவின் உருவத்தில் வந்தது!''

'' ஐயோ! மலேரியாவா?'' என்று வேவல் அலறிக்கொண்டு எழுந்தார்.

'' இல்லை; மலேரியா இங்கே வரவில்லை. அமைதியாக உட்காருங்கள். அதிர்ஷ்டமானது மலேரியாவின் உருவத்தில் ஆகாகான் அரண்மனை சென்றது. மகாத்மாவைப் பிடித்து, அவரை விடுதலை செய்தது! நீங்கள் மகாத்மாவை யுத்தம் முடியும் வரையில் சிறையில் வைத்திருக்க நினைத்தீர்கள். எங்களிலும் அநேக புண்ணியவான்கள் 'அதுவே நல்லது' என்று எண்ணியிருந்தார்கள். ஆனால், நீங்களும் இந்தியாவும் செய்த அதிர்ஷ்டத்தினால் மகாத்மா விடுதலையடைந்தார்!''

'' போயும் போயும் இதையா அதிர்ஷ்டம் என்று சொன்னீர்? இந்த காந்தி விடுதலையானாலும் ஆனார், எனக்குப் பெரிய தலைவலியாக அல்லவா போய் விட்டது? அதனால் நான் படுகிற கஷ்டம் உமக்கு என்ன தெரியும்? எல்லாவற்றையும் ஒரே குழப்பமாய்க் குழப்பி விட்டாரே?''

'' எங்கள் புராணக் கதையில் வரும் பிராமணன் அதிர்ஷ்டம் கிட்டி* வந்த போது கண்ணை மூடிக் கொண்டான். நீங்களோ அதிர்ஷ்டத்தையே துரதிர்ஷ்டமாக எண்ணிக் கொண்டு அவஸ்தைப் படுகிறீர்கள்!''

'' அது எப்படிச் சொல்கிறீர்?''

'' மகாத்மா 'நியூஸ் கிரானிகல்' நிருபரிடம் உங்களுக்கென்றே சொல்லியனுப்பிய செய்திகளை நீங்கள் பத்திரிகைகளில் படிக்கவில்லையா? அதற்குப் பிறகு மகாத்மா வெளியிட்டிருக்கும் அறிக்கைகளைப் பார்க்கவில்லையா?''

'' பார்த்தேன்; அதனால் நான் சங்கடப் படுகிறேன். அந்த 'நியூஸ் கிரானிகல்' நிருபரின் மண்டையை உடைக்கலாமா என்று தோன்றுகிறது. காதும் காதும் வைத்தாற்போல் என்னிடம் வந்து செய்தியைச் சொல்லியிருக்கக் கூடாதா? எதற்காகப் பத்திரிகையிலே பிரசுரித்தார்?''

'' அந்தப் பத்திரிகை நிருபர் சுயநலங் காரணமாகப் பிரசுரித்த போதிலும், தம்மை யறியாமலே ஒரு பெரிய நல்ல காரியத்தைச் செய்து விட்டார். உங்களுக்கு வந்திருக்கும் அதிர்ஷ்டத்தை நீங்கள் உணராமற் போனாலும் மற்றவர்கள் எடுத்துக் காட்ட இடமிருக்கிறதல்லவா? எனவே, அந்தப் பத்திரிகை நிருபரின் காரியத்திலும் பிரிட்டிஷ் அதிர்ஷ்டம் கலந்திருக்கிறது.''

'' அதிர்ஷ்டம், அதிர்ஷ்டம் என்கிறீரே, என்ன அதிர்ஷ்டம்?''

'' மூன்று வருஷத்தில் முடிகிற யுத்தத்தை ஒரு வருஷத்தில் முடிக்கிறதாயிருந்தால்,—பிரிட்டனுக்கும் இந்தியாவின் நாற்பது கோடி மக்களுக்கும் நிரந்தரமான சிநேகம் ஏற்படுவதாயிருந்தால்,—இதெல்லாம் அதிர்ஷ்டம் இல்லையா?''

'' அந்த அதிர்ஷ்டம் எங்கே எப்படி வந்திருக்கிறது?''

'' தற்கால நிலைமையை யொட்டி மகாத்மா வெளியிட்டிருக்கும் யோசனைகளில் அடங்கியிருக்கிறது. அந்த யோசனைகளில் முக்கியமானவற்றை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். முதலில், சட்ட மறுப்பு ஆரம்பிக்கும் எண்ணம் தமக்குக் கிடையாதென்று மகாத்மா திட்டமாகச் சொல்லிவிட்டார். இரண்டாவது, யுத்தம் முடியும் வரையில் இந்தியாவின் இராணுவப் பொறுப்பை பிரிட்டிஷாரிடமே விட்டு வைக்க ஒப்புக்கொள்கிறார். மூன்றாவது, மற்ற சிவில் இலாகாக்கள் எல்லாவற்றையும் நிர்வகிப்பதற்குத் தேசிய மந்திரி சபை அமைக்கும் ஏற்பாட்டை ஒப்புக் கொள்கிறார். இந்தியாவின் அரசியல் பிரச்னையைச் சமரசமாகத் தீர்ப்பதற்கு மேற்படி யோசனைகளைக் காட்டிலும் சிறந்த யோசனைகள் இருக்க முடியுமா?''

வேவலைக் கொண்டு வா!

"எங்கே அந்த வேவல்? கொண்டு வா இங்கே அவரை! வைஸ்ராய் வேவல் துரையைத்தான் சொல்கிறேன். கொண்டு வா என்றால் உடனே போய்க் கொண்டு வராமல் ஏன் இப்படி விழித்துக்கொண்டு நிற்கிறாய்? நீயும் ஜனாப் ஜின்னாவா விழிப்பதற்கு?" என்று நாம் அதட்டவும்,

"இதோ வாசலில் வந்து நிற்கிறார்; அழைத்து வரட்டுமா?" என்று ஆபீஸ் பையன் தங்கமுத்து ஒரு பெரிய குண்டைப் போட்டான்.

"வாசலில் யார் வந்திருக்கிறது?" என்று மறுபடியும் அதட்டினோம்.

"வைஸ்ராய் வேவல் துரைதான் வந்திருக்கிறார். இப்போதுதான் ஏரோப்ளேனில் வந்து இறங்கினார்."

"என்ன உளறுகிறாய்?"

"நான் ஒன்றும் உளறவில்லை. உளறுவதற்கு நானும் ராஜாஜி திட்டத்தை எப்போதாவது எதிர்த்தேனா, என்ன?"

"இல்லை: ராஜாஜி திட்டத்தை நீ எதிர்க்கவில்லை. ஆகையால் உளற வேண்டிய அவசியமும் இல்லை. யார், வைஸ்ராய் வேவலா வந்திருக்கிறார்?"

"ஆமாம்."

"மனுஷர் ரொம்ப விழிக்கிறாரா, என்ன?"

"அவ்வளவு ரொம்ப விழிக்கவில்லை; கொஞ்சம் கொஞ்சம் விழிக்கிறார்!"

"சரி, அழைத்துக் கொண்டு வா!"

இதற்குள் வைஸ்ராய் வேவலே உள்ளே வந்து விட்டார்.

"வந்தீர்களா? உங்களைக் கொண்டு வரும்படிதான் சொல்லிக் கொண்டிருந்தேன். அதற்குள் நீங்களே வந்து விட்டீர்கள். உட்காருங்கள்!"

வேவல் உட்கார்ந்தார்.

"எதற்காக என்னைக் கொண்டு வரச் சொன்னீர்?" என்று கேட்டார்.

"யோக க்ஷேமம் விசாரிக்கலாமென்றுதான். என்ன சேதி? என்ன சமாசாரம்? இந்திய சாம்ராஜ்யம் நன்றாக நடந்து வருகிறதா? சூரியன் காலையில் உதிக்கிறானா? கடலில் அலை அடிக்கிறதா? அஸ்ஸாமில் நமது படைகள் ஜப்பானியரைச் சரிவரத் துரத்தியடித்துக் கொண்டிருக்கின்றனவா? வங்காளப் பஞ்சம் சௌக்கியமா? ஸிம்லாவில் குளிர் எப்படி இருக்கிறது? இரண்டாவது போர்முனையில் நமது படைகள் எவ்வளவு அங்குலம் முன்னேறியிருக்கின்றன? ருஷியப் படைகள் எவ்வளவு மைல் மேலே வந்திருக்கின்றன? பறக்கும் குண்டு கிளம்பும் இடங்களை நமது விமானங்கள் நன்றாக நொறுக்கி வருகின்றனவா? கடைசியாகக் கேட்கிறேன். நமது ஆபீஸ் பையன் தங்கமுத்து சொல்வதுபோல், கொஞ்சம் திருதிருவென்று விழிக்கிறீர்களே, அது ஏன்?" என்று கேட்டோம்.

"எல்லாம் உங்கள் காந்தி அடிக்கிற கூத்துத்தான்!"

"வேவல் ஐயா! அப்படி வாருங்கள் விஷயத்துக்கு! இந்தச் சமாசாரத்தைப் பற்றித் தங்களுக்கு இரண்டொரு வார்த்தை சொல்லலாமென்றுதான் நானும் எண்ணியிருக்கிறேன்."

"என்ன சொல்ல எண்ணியிருந்தீர்?"

"முதலில், உங்கள் அதிர்ஷ்டத்தைப் பாராட்ட எண்ணியிருந்தேன்."

"என்ன அதிர்ஷ்டம்?"

"மொத்தத்தில் பிரிட்டிஷ்காரனைப் போல் அதிர்ஷ்டக்காரன் வேறு யாருமில்லை. முதல் முதல் இவ்வுலகில் தோன்றிய பிரிட்டிஷ்காரன் எந்த ராகு கால வேளையில் பிறந்தானோ, தெரியாது. பிரிட்டிஷ்காரனுக்கு அதிர்ஷ்டத்துக்கு மேல் அதிர்ஷ்டம் அடித்துக்கொண்டுதானிருக்கிறது. இந்த யுத்தத்திலேயே பாருங்கள். ஹிட்லருடைய மூளை குழம்பி ருஷியாவின்மேல் படையெடுத்தது, பிரிட்டிஷாருடைய அதிர்ஷ்டத்தினால்தானே? அதற்கு வேறே என்ன காரணத்தைச் சொல்ல முடியும்?"

"சரி; அப்புறம்?"

"தூங்கிக் கொண்டிருந்த ராட்சஸனை எழுப்பிவிட்டதுபோல், ஜப்பான் திடீரென்று அமெரிக்காவைத் தாக்கி அதை-

துக்கு முன்னால் ராஜாஜியின் திட்டத்தை நிராகரித்தபோது வேணுமானால் மகாத்மாவுக்கு யோசிக்கப் போதிய அவகாசம் இருக்கவில்லையென்று சொல்லலாம். இப்போது அம்மாதிரி சொல்வதற்குச் சிறிதும் இடமில்லை. "மகாத்மாவை ராஜாஜி ஏமாற்றிவிட்டார்" என்று சொல்வது, வடிகட்டின அயோக்கியத்தனமும் அல்ப புத்தியுமாகும்.

அதிகப் பிரசங்கிகள்

அரசியல் கோரிக்கை சம்பந்தமான மகாத்மாவின் தற்போதைய அபிப்பிராயங்கள் ஏறக்குறைய ராஜாஜியின் அபிப்பிராயங்களுக்கு ஒத்து வந்திருக்கின்றனவல்லவா? மேற்படி மாறுதலைக் குறித்துச் சில அதிகப் பிரசங்கிகள் மகாத்மாவுக்குப் புத்தி போதிக்கவும் பயமுறுத்தவும் முன் வந்திருக்கிறார்கள். "ராஜாஜியின் போதனையினால் ஜின்னாவுக்கும் பிரிட்டிஷாருக்கும் தேசத்தைக் காட்டிக் கொடுக்கப் பார்க்கிறீர்கள். ஆனால் உங்களால்கூட அது முடியாத காரியம்" என்று கூசாமல் தந்தியடிக்கிறார்கள். இப்படி அகம்பாவ சிகரத்திலிருந்து புத்தி சொல்லும் பேர்வழிகள் சென்ற இரண்டு வருஷமாக மகாத்மாவும், மற்றும் பல தேசத் தலைவர்களும் சிறையிலிருந்தபோது என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்றால், திவ்யமாகப் பணத்தை வாரிக் குவித்துக் கொண்டிருந்தார்கள். காக்கியையும் காங்கிரஸையும் ஆதரித்து எழுதின கையோடு அவசர அவசரமாக அதிகார வர்க்கத்தினிடம் சென்று அதே கையை நீட்டி யுத்த விளம்பரங்களை வாங்கிக் கொண்டு வந்தார்கள். மகாத்மாவின் அஹிம்சையை ஆதரித்து எழுதிவிட்டு உடனே இராணுவ உத்தியோகஸ்தர் நடத்திய பார்ட்டிக்குச் சென்று சலாம் போட்டார்கள். தங்களுடைய சுயநலச் சுரண்டல் வேலை சரிவர நடக்கும் பொருட்டாக மகாத்மாவும் மற்றத் தலைவர்களும் எப்போதும் சிறையில் இருக்க வேண்டுமென்று இவர்கள் விரும்புவதாகக் காண்கிறது.

தேச விடுதலைக்குரிய காரியத் திட்டத்தைப் பற்றித் தேசத் தலைவர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்படலாம். ஏதோ ஒரு திட்டத்தினால் பயனில்லையென்று கண்டால் அதை மாற்றி இன்னொரு திட்டத்தை மேற்கொள்ள நேரிடலாம். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் பொது ஜனங்கள் தங்கள் தங்களுக்கு உசிதமான திட்டத்தை ஆதரிக்கவும், கடைப்பிடிக்கவும் உரிமையுடையவர்கள்.

ஆனால் தியாக மூர்த்திகளான நமது ஒப்பற்ற தேசத்தலைவர்களைக் கண்டபடி தூஷிக்கவோ, தேசத்தைக் காட்டிக் கொடுக்கிறார்கள் என்று சொல்லவோ, சுயநல வேஷதாரிகளுக்கும், நாகரிகச் சூதாடிகளுக்கும், பகல் கொள்ளைக்காரர்களுக்கும் இடம் கொடுத்தோமானால், தேசத்துக்கு அதைவிடக் கேடு வேறு ஒன்றும் இல்லை.

மற்ற நாடுகளில்


இந்தியாவிலே மட்டுமல்ல; மற்ற நாடுகளிலும் தேசத் தலைவர்களுக்குள்ளே சில சமயம் அபிப்பிராய பேதங்கள் உண்டாகின்றன; முக்கியமான விஷயங்களில் உண்டாகின்றன. இங்கிலாந்தில் சேம்பர்லினும், சர்ச்சிலும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால் சேம்பர்லின் அதிகாரத்திலிருந்தபோது அவருடைய கொள்கைக்கு மாறான கொள்கையைச் சர்ச்சில் தீவிரமாக வெளியிட்டுக் கொண்டிருந்தார். ஆனால் அவர் ஒண்டி ஆளாகவே வெகு காலம் இருக்க நேர்ந்தது. அவர் பேச்சுக்கு யாரும் செவி கொடுக்கவில்லை. யுத்தம் வந்ததும் நிலைமை மாறியது. சேம்பர்லின் கொள்கை பிசகானது என்றும், சர்ச்சில் கொள்கைதான் சரி என்றும் ஜனங்கள் கண்டார்கள். உடனே சர்ச்சிலைப் பிரதம மந்திரியாக்கி அவரிடம் சகல அதிகாரங்களையும் கொடுத்தார்கள். சர்ச்சிலுக்குக் கீழ் சேம்பர்லின் வேலை செய்யவும் பின் வாங்கவில்லை. பொது அபிப்பிராயத்துக்கு மாறாகப் பேசியதற்காகச் சர்ச்சிலை அப்போதே தேசத் துரோகி என்று தீர்மானித்து அடியோடு குழி வெட்டிப் புதைத்து விட்டிருந்தால், இங்கிலாந்தின் கதி இப்போது என்ன ஆகியிருக்கும், பாருங்கள்!

மேற்கூறிய சிறந்த ஜனநாயக முறையை இந்தியாவிலே நாமும் பின்பற்ற வேண்டியது அவசியம். தலைவர்களுக்குள்ளே அபிப்பிராய பேதம் ஏற்பட்டால், நமக்கு எது பிடிக்கிறதோ அதை ஆதரித்து நிற்கலாம். அதற்காக இன்னொரு அபிப்பிராயம் சொல்லும் தலைவரை "தேச விரோதி" என்று ஆக்கிவிட வேண்டியதில்லை. அப்படிச் செய்வது தற்கொலைக்கு ஒப்பான மூடத்தனம். மாறுபட்ட அபிப்பிராயம் சொல்லும் தலைவரையும் மரியாதையாக நடத்தி வந்தால்தான், ஒரு வேலைத் திட்டம் பயனற்றுப் போனால் இன்னொரு திட்டத்தை நடத்திப் பார்க்க முடியும்.


தலைவர்களின் அபிப்பிராய வேற்றுமைப் போரில் சுயநல வேஷதாரிகள் புகுந்து நாசம் விளைவிக்கக் கண்டிப்பாய் இடம் கொடுக்கக் கூடாது.

-உம்மன்


சிம்லா
மகாத்மாவின் அறிக்கைகளினால்
ஏற்பட்ட உஷ்ணம் தாங்காமல்,
தளபதி வேவல் குளிர்ந்த சிம்லாவைத்
தேடிப் போயிருக்கிறார்!


ஜனாப் ஜின்னாவுடன் நடத்த வேண்டிய
போராட்டத்தை ஹிந்து மகாசபைக்கே
விட்டு விடும்படி டாக்டர் மூஞ்சே கோருகிறார்!

நிகழ்ச்சிச் சித்திரம்



கல்கி

மலர் 3 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் { இதழ் 41

என்ன சேதி?

யாருக்குப் புத்தி?

ராஜாஜியின் கட்சிதான் சரியான கட்சி என்பது உள்ளங் கை நெல்லிக் கனிபோல் தெரிந்து போன பிறகும் சில மேதாவிகளுக்கு அவரைத் தூஷிக் காமலிருக்க முடியவில்லை. தங்களுடைய பழைய அசட்டுத்தனங்களை மறைத்துக் கொள்வதற்காக அவர்கள், "இனிமேலாவது ராஜாஜிக்குப் புத்தி வருமா?" என்று கேட்கிறார்கள். ராஜாஜியின் புத்திதான் இந்தியாவிலேயே தெளிவான புத்தி என்பதும், அவருடைய புத்திமதியைக் கேட்காததினாலே தேசம் எவ்வளவோ மகத்தான நஷ்டங்களை அடைந்திருக்கிற தென்பதும் இப்போது மிக மிகத் தெளிவாகப் புலப்பட்டிருக்கிறது. புத்தி யாருக்கு வரவேண்டுமென்றால், அவரை வரைதுறையில்லாமல் குற்றம் கூறியவர்களுக்குத்தான். இத்தனைக்குப் பிறகும் அந்த மகானுபாவர்களுக்குப் புத்தி வரவில்லையென்றால், அவர்கள் ஆண்டவனிடம் போய் முறையிட்டுக் கொண்டு "எங்களுக்குக் கொஞ்சம் புத்தியைக் கொடு!" என்று வேண்டிக் கொள்வதைத் தவிர வேறு வழி கிடையாது!

சிந்திக்க மாட்டார்கள்!

ராஜாஜி ஏதோ முஸ்லிம் லீக்கின் வக்கீலாகி விட்டதாகவும், ஜின்னாவுடன் ஐக்கியமாகி விட்டதாகவும் அந்தக் காலத்தில் சிலர் பிதற்றினார்கள். அந்தப் பிதற்றலை அவர்களே இப்போது ஞாபகப் படுத்திவிட்டு, "முன்னே ராஜாஜி அப்படி இருந்தார்; இப்போது ஜின்னாவின் சிநேகத்தை அறுத்துக் கொண்டு வந்துவிட்டார்" என்கிறார்கள். மகாத்மா காந்தியின் கூட்டுறவைக் காட்டிலும்,-நெடுங்காலத்து நெருங்கிய நண்பர்களான வல்லபாய், ராஜேந்திர பிரஸாத், ஜவாஹர்லால் இவர்களுடைய சிநேகத்தைக் காட்டிலும்-ஜின்னாவின் சிநேகத்தையோ கூட்டுறவையோ ராஜாஜி என்ன காரணத்துக்காக அதிகமாய் விரும்ப வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்த்தார்களானால், மேற்கண்ட விதமாகப் பிதற்றுவதற்கு இடமிராது. ஆனால், அவர்கள் ஏன் சிந்திக்கப் போகிறார்கள்? இந்தியா அடிமை நாடாகவே இருக்க வேண்டுமென்று எண்ணங் கொண்ட கரண்டல் வர்க்கத்தார் சொல்லிக் கொடுக்கும் பாடத்தை ஒப்புவிப்பது தானே அவர்களுடைய வேலை? எதற்காகச் சிந்தனை செய்ய வேண்டும்?

ஏமாற்றிவிட்டாரா?

இன்னும் சில அதி மேதாவிகள் "ராஜாஜி ஏதோ தந்திரம் செய்து மகாத்மாவை ஏமாற்றி விட்டார்!" என்னும் அபத்தப் பல்லவியைப் பாடுகிறார்கள். ராஜாஜி ஏமாற்றக் கூடியவர் என்றோ மகாத்மா ஏமாந்து போகக் கூடியவர் என்றோ இவர்கள் நினைப்பதிலுள்ள மடமை ஒரு பக்கம் இருக்க, அப்படி ஏதோ ஒரு பலவீனமான சமயத்தில் ராஜாஜியின் போதனையைக் கேட்டு மகாத்மா தீர்க்காலோசனை செய்யாமல் சம்மதம் கொடுத்து விட்டார் என்று சொல்வதற்காவது இடமிருக்கிறதா? ராஜாஜியின் திட்டத்துக்கு மகாத்மா சம்மதம் கொடுத்தது ஒன்றேகால் வருஷத்துக்கு முன்னால். ராஜாஜி அப்போது அதை வெளியிடவில்லை. பின்னர் மகாத்மா யோசனை செய்யவும் புனராலோசனை செய்யவும் வேண்டிய அவகாசம் பதினைந்து மாத காலம் இருந்திருக்கிறது. மகாத்மா விடுதலையடைந்த பிறகும் அவரைப் பார்ப்பதற்கு ராஜாஜி விழுந்தடித்து ஓடவில்லை. மகாத்மா பல்வேறு அபிப்பிராயங் கொண்டவர்களைப் பார்ப்பதற்கும் கலந்து யோசிப்பதற்கும் வேண்டிய அவகாசம் கொடுத்து விட்டுத்தான் ராஜாஜி போனார். இரண்டு வருஷத்

கல்கி

பொருளடக்கம்

மலர் 3 } இதழ் 41 }   1944 ஜூலை 23   { தாரண ஆடி 8

அரசியல்

என்ன செய்தி?	...	...	7
வேலையைக் கொண்டு வா!	...	...	11

இலக்கியம்

சகுனியின் பிரவேசம்	...	ராஜாஜி	17
ஆனந்தத்தின் தொனி	...	டி. கே. சி.	37
படித்துப் பார்!	...	...	45

கதைகள்


சிவகாமியின் சபதம்	...	கல்கி	21
தனக்கு வந்தால் தெரியும்!	...	சௌந்தரம்	38
விதியும் மதியும்	...	சுத்தானந்த பாரதி	42
விடாக் கண்டர்	...	ஸோமாஸ்	43

ஆடல் பாடல்	...	கர்நாடகம்	15
பாப்பா மலர்	...	ராஜீ	30
பலசரக்கு	...	...	37
ஆகாசவெடி	...	...	14
காலக்ஷேபம்	...	...	32

கார்ட்டூன்

நிகழ்ச்சிச் சித்திரம்	...	உம்மன்	8

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



★

"ஆடு ராட்டே சுழன் றாடு ராட்டே!" என்று பாடி, அப் பாட்டின் மயக்கத்தில் தமிழ் நாட்டையே சுழன்றாடச் செய்த நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் உருவப்படம் நமது இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கிறது. நாமக்கல் இராமலிங்கம் கலைஞர்; கவிஞர்; தேசபக்தர்; தமிழன்பர்; கட்டுரை ஆசிரியர்; கதை ஆசிரியர்; தேசத் தொண்டிலே தியாகம் செய்தவர்; சிறைவாசம் புரிந்தவர்; கள்ளங் கபடமற்ற சாது; ஒழுக்கத்திலும் உயர்ந்தவர்; அன்பிலும் நண்பர்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர்; புகழுக்கும் பொருளுக்கும் ஆசைப் படாதவர்; ஆடம்பரத்தை வெறுப்பவர். இப்பேர்ப்பட்டவருடைய தேசத் தொண்டும் தியாகமும் பூரண பலனை அளிக்கட்டும்! "சுயராஜ்யம் வந்ததென்று ஆடுராட்டே!" என்னும் இவருடைய கவி வாக்குப் பலிக்கட்டும்; தமிழும் தமிழ் நாடும் உயர்ந்து ஓங்கட்டும்.

★



452

©NAS

சேல்ஸ் டிப்போ: 158-B. ப்ராட்வே, ஜி. டி., மதராஸ்.


திருப்தி, அமைதி
ஒரு கப் டீ அருந்தியவுடன்.
கேட்பானேன், நரஸூஸ் டீ
தான்! நல்ல காபி, டீயை
அனுபவிக்க அறிந்தவர்கள்
நரஸூஸ் காபி, டீயையே
விரும்புகிறார்கள்.
நரஸூஸ்
இந்தியத்தயாரிப்பில் தலைசிறந்தது
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
சேலம் தென்னிந்தியா
MNK-22-TM

எல்லோராலும் எவ்வகையிலும்
மேன்மையானதெனப் போற்றப்படும்

தமிழ் ஹரிச்சந்திரா

ப்ரகதி
தயாரிப்பு

★

இப்பொழுது தமிழ் நாட்டிலும்
ஆந்திர தேசத்திலும் வெற்றிகரமாக
- நடைபெறுகிறது -

★

டிஸ்டிரிபியூடர்கள் :

FAMOUS TALKIE DISTRIBUTORS

MADRAS — MADURA — BANGALORE — BEZWADA — HUBLI

றக் குலத்தோரையாவது எந்தச் சமயத்திலும் கடிந்து பேசமாட்டேன். குலத்தோர் விருப்பப்படி எப்போதும் நடந்து கொள்வேன். மன வேறுபாட்டுக்கு இடம் தரமாட்டேன். மனவேறுபாட்டினால்தான் உலகத்தில் கலகம் உண்டாகிறது. சண்டைகளுக்கு மூலகாரணமாகிய கோபத்தைத் தடுத்து விட்டு துரியோதனாதியர்களுடைய பேச்சைத் தடுக்காமல் அவர்களுடைய விருப்பப்படியே எப்போதும் நடந்து கொள்வேன். வியாசர் எச்சரிக்கை செய்தபடி கோபத்துக்கு இடம் கொடாம லிருப்பேன்'' என்றான். அதைக் கேட்ட சகோதரர்களும், ''கலகத்துக்கு நாம் காரணமாகக் கூடாது. நீர் சொல்லுவதே சரி'' என்றார்கள்.

துரியோதனாதியர் சூதாட்டத்துக்கு அழைத்தபோது மாட்டேன் என்று சொல்லாமல் ஒப்புக்கொள்ளுவதற்கு இந்தப் பிரதிக்ஞையே முக்கியமான காரணம். கலகம் வரும் என்று பயந்து அதற்கு இடம் கொடுக்கா திருப்பதற்காக யுதிஷ்டிரர் எடுத்துக் கொண்ட பிரதிக்ஞையே பிறகு கலகத்துக்குக் காரணமாயிற்று. அழைப்பை மறுக்கப் பயந்து சூதாட்டம் ஆடியதின் பயனாகத் தீராத பெருங் கோபமும் பிறகு மகா யுத்தமும் குல நாசமும் உண்டாயின.

மனிதனுடைய சாதுர்யமும் சங்கல்பங்களும் பிரயத்தனங்களும் எண்ணிய நோக்கத்திற்கு நேர் விரோதமான முடிவுக்குப் போய்ச் சேரும் என்பதற்கு தருமபுத்திரனுடைய இந்தப் பிரதிக்ஞையே உலகப் பிரசித்தியான திருஷ்டாந்தமாகும்.

* * *

கலகம் வருமே என்று தருமபுத்திரன் கவலைப்பட்டுக் கிடக்க, துரியோதனன் பாண்டவ ராஜதானியில் ராஜசூய யாகம் நடந்தபோது தான்கண்ட ஐஸ்வர்யத்தை நினைத்துப் பொறாமை என்கிற நெருப்பில் வீழ்ந்து தவித்துக் கொண்டிருந்தான். என்றும் பார்த்திராத செல்வத்தையும் கண்ணைக் கவர்ந்து மோசம் செய்யும்படியான படிகக் கதவுகளையும் சிற்ப வேலைகளையும் யுதிஷ்டிரனுடைய சபா மண்டபத்தில் துரியோதனன் கண்டான். பல தேசத்து அரசர்கள் பாண்டவர்களுக்குச் சிநேகிதர்களாயிருப்பதைப் பார்த்துத் திருதராஷ்டிரன் மகனுக்குத் தாங்க முடியாத துயரம் உண்டாயிற்று. பாண்டவர்களுடைய ஐஸ்வர்ய தசையை எண்ணி யெண்ணி வருந்திக் கொண்டிருந்த துரியோதனனுக்குத் தன் பக்கத்தில் நின்ற சகுனி பேசுவது கூடத் தெரியவில்லை.

''ஏன் பெரு மூச்சு விடுகிறாய்? ஏன் துக்கம் உன்னை வாட்டுகிறது?'' என்று சகுனி துரியோதனனைக் கேட்டான்.

''சகோதரர்களால் சூழப்பட்டு யுதிஷ்டிரன் இந்திரனைப் போல் அரசு புரிகிறான். குழுமியிருந்த அரசர்களுக்கு எதிரில் சிசுபாலன் வதஞ் செய்யப்பட்டான். அதற்குப் பழி வாங்க எந்த க்ஷத்திரியனும் முன் வரவில்லை. பாண்டவர்களைக் கண்டு பயந்து நடுங்கி ஒன்றுஞ் செய்யாமல் சும்மா நின்றனர். ரத்தினங்களையும் தனங்களையும் ராஜ குலத்தவர்கள் கேவலம் வைசியர்களைப் போல் அடங்கி ஒடுங்கி யுதிஷ்டிரனுக்குக் காணிக்கை செலுத்தினார்கள். இதையெல்லாம் பார்த்த பின் நான் எவ்வாறு வருத்தப்படாம லிருக்க முடியும்? நான் உயிருடன் இருந்து என்ன பயன்?'' என்றான் துரியோதனன்.

சகுனி, ''துரியோதனா! பாண்டவர்கள் உன் சகோதரர்கள் அல்லவா? அவர்களுடைய சம்பத்தைப் பார்த்துப் பொறாமைப்படத் தகாது. தங்களுக்கு நியாயமாகக் கிடைத்த பாகத்தை அவர்கள் அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய அதிருஷ்டத்தினால் அவர்கள் பாக்கியம் பெற்று மேன்மை அடைந்திருக்கிறார்கள். பிறருக்கு எவ்விதத் துரோகமும் செய்யாமல் தங்கள் பாகத்தை வைத்துக்கொண்டு தங்கள் சக்தியின் பயனாக அவர்கள் அபிவிருத்தி அடைந்திருப்பதைப் பார்த்து நீ ஏன் பொறாமைப்படுகிறாய்? அவர்களுடைய பலமும் சந்தோஷமும் உனக்கு எவ்வாறு குறை செய்யும்? உன்னுடைய சகோதரர்களும் பந்துக்களும் உன் பேச்சுக்கு அடங்கி நிற்கிறார்கள். துரோணரும் அசுவத்தாமரும் கர்ணனும் உன் பட்சத்தில் இருக்கிறார்கள். நீ ஏன்



திருதராஷ்டிரன்